# புதிய பூமி

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

PUTHIYA POOMI

சுற்று 07 நவம்./டிசம்பர் 2000 பக்கம் 10 விலை 10/= சுழற்சி 37


## அங்கும் இங்கும்

- அமெரிக்காவில் கறுப்பர்களுக்கு நீதி தாராளமாக இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால் அந்த நீதி நடைமுறையில் மிகவும் வங்குரோத்தாக இருப்பதே உண்மையாகும்.
- அமெரிக்காவில் கறுப்பர்களின் உரிமைக்கான தீவிர எழுச்சி போற்றத்தக்கதாகும். ஆனால் அவ் எழுச்சி எல்லா வெள்ளை இன மக்களினதும் நம்பிக்கையை இழப்பதாக முன்னெடுக்கப்படக் கூடாது.

*மாட்டின் லூதர் கிங்.*

# நோர்வேயின் சமாதான முயற்சியை வழிமறிக்கும் பேரினவாதக் கூச்சசல்

இம் மாதம் (நவம்பர்) முதலாம் திகதி நோர்வேயின் விஷேட தூதுவர் எரிக் சொல் ஹெய்ம் வன்னியில்




விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைச் சந்தித்துப் பேசியுள்ள நிகழ்வானது தற்போதைய யுத்த சூழலில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. முற்றிலும் அரசாங்கத்தின் இரகசிய ஏற்பாட்டுடன் இடம் பெற்ற மேற்படி சந்திப்பின் விபரம் ஜனாதிபதியிடம் எடுத்துரைக்கப்பட்டது.

ஜனாதிபதியின் பாராளுமன்ற கொள்கை விளக்க உரைக்குப் பின்பு நோர்வேயின் சமாதான முயற்சியின் அடுத்த கட்ட நகர்வு ஆரம்பித்துள்ளது. தற்போது கொழும்பு, புது டெல்லி, லண்டன், ஒஸ்லோ ஆகிய நகரங்கள் சமாதான முயற்சியின் பிரதான பேச்சுக் களங்களாகி நிற்கின்றன.

இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்கு யுத்தத்தின் மூலம் தீர்வுகாண முடியாது என்பதையும் பேச்சுவார்த்தை அடிப்படையில் நியாயமான அரசியல் தீர்வே உரிய வழிமுறை என்பதை நாட்டு மக்கள் சார்பாக பல தரப்பிலிருந்தும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வந்துள்ளன. இதனை வலியுறுத்துவதில் நேர்மையான இடதுசாரி ஜனநாயக முற்போக்கு சக்திகள் எப்போதும் முன்வரிசையில் நின்று யுத்த எதிர்ப்பு அரசியல் தீர்வுக்கான இயக்கத்தை முன்னெடுத்து வந்துள்ளன. யுத்தத்தின் விளைவால் வடக்கு கிழக்கு யுத்தத் தீயால் எரிந்து கொண்டிருப்பதுடன் நாட்டின் பொருளாதாரமும் மக்களின் வாழ்க்கை நிலைமைகளும் நாசமடைந்து கொண்டன.

இப்பொழுது இரண்டாவது தடவையாக



பொதுசன முன்னணி பதவிக்கு வந்த கையோடு பேச்சு வார்த்தைக்கான முயற்சிக்கு நோர்வே ஊடாக பச்சை விளக்கு காட்டி நிற்கிறது. இந்த முயற்சி வரவேற்கப்பட வேண்டியது. அதேவேளை கைவிடப்படக் கூடாது என்பதும் வலியுறுத்தப்பட வேண்டியதாகும்.

ஏனெனில் நோர்வேயின் முயற்சிக்கு பேரினவாத சக்திகளிடமிருந்து எதிர்ப்பு ஆரம்பித்து விட்டது. சிஹல உறுமய, வீரவிதான பயங்கரவாத தேசிய எதிர்ப்பு முன்னணி போன்றன பேச்சுவார்த்தை வேண்டாம், யுத்தம் தொடர வேண்டும், நோர்வே வெளியேற வேண்டும் எனக் கூச்சல் போட்டு வீதியில் இறங்கி உள்ளன. இவர்கள் அடுத்த கட்டமாக மகாசங்கத்தினரையும் உசுப்பி வீதியில் இறங்க வைப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. சாகும்வரை உண்ணாவிரதம் இருந்த நிகழ்வு அன்மையில் நடந்ததாகும். அது மட்டுமன்றி பிரதமர் முதற்கொண்டு அரசாங்கத் தரப்பிலும்

*10 ம் பக்கம் பார்க்க*

## *துணிவும் தூரநோக்கும் ஜனாதிபதியிடம் தோன்றுமா?*

# வடக்கு - கிழக்கு - மலையகத்தில் ஜனநாயக மனித உரிமைகள் மிதிக்கப்படுகின்றன

பொதுத் தேர்தல் முடிவுற்ற பின்பு வடக்கு கிழக்கிலும் மலையகத்திலும் மோசமானவன்முறைகள் மக்களுக்கு எதிராக நடாத்தப்பட்டுள்ளன. படுகொலைகள் வீழ்ந்துள்ளன. தாக்குதல்கள், தீ வைப்புகள் இடம் பெற்றுள்ளதுடன் பலர் படுகாயங்களும் அடைந்துள்ளனர். ஆனால் அரசாங்கம் இவ் விடயத்தில் வேண்டுமென்றே பாராமுகமாக நடந்து கொள்கிறது.

வடக்கில் பத்திரிகையாளர் நிமல்ராஜன் கொலையும் கிழக்கில் பாராளுமன்ற உறுப்பினர் நிமலன் சவுந்தரநாயகம் கொலையும் மர்மமாகவே விடப்பட்டுள்ளது. வடக்கில் மேலும் இரண்டு கொலைகள் நடந்துள்ளன. தேர்தல் பழிவாங்கல்களும் மிரட்டல்களும் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன.

மலையகத்தில் பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு நிலையப் படுகொலைகளுக்கான விசாரனைகள் வெறும் கண்துடைப்பாகவே உள்ளன. அங்கு கொலைகளுக்கு உள்ளான தமிழ் இளைஞர்கள் மனிதர்களாகவே மதிக்கப்படவில்லை. அவ்வாறே அக் கொலைகளுக்கு கண்டனம், எதிர்ப்பு, அனுதாபம் தெரிவித்த மலையக மக்களும் கீழ்த்தரமாக நடாத்தப்பட்டுள்ளனர். நான்கு பேர் பொலீஸ்துப்பாக்கிக்கு இரையாகி இரண்டு பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்டனர். கடைகள், வீடுகள் தீடப்பட்டுள்ளன. பல இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இத்தனையும் பேரினவாத வெறித்தனத்தோடுதான் மலையக மக்கள் மீது புரியப்பட்டுள்ளன.

வடக்கு கிழக்கில் அரசின் ஆசீர்வாதம் பெற்ற ஆயுத இயக்கங்கள் தமது அடாவடித்தனங்களை மக்கள் மீது புரிந்து வருகின்றன. ஜனநாயக நீரோட்டத்திற்கு வந்துள்ளதாகக் கூறிக் கொண்ட தமிழ் இயக்கங்களின் கைகளில் ஆயுதங்களை வைத்திருக்க அரசாங்கம் அனுமதியளித்துள்ளது. அரசாங்கத்தை ஆதரிக்கும் தமிழ் இயக்கங்கள் ஆயுதம் வைத்திருக்கலாம். இனம் தெரியாத கொலைகளையும் செய்யலாம். ஆனால் அரசாங்கத்தின் எல்லையைத் தாண்டி அரசாங்கத்தைக் கண்டித்தால் அல்லது எதிர்த்தால் எந்த இயக்கமும் ஆயுதம் வைத்திருக்க முடியாது. இதனை ரெலோ இயக்கத்தின் மீதான அண்மைய நடவடிக்கைகளில் இருந்து புரிந்து கொள்ளலாம். அரசாங்கத்திற்கு எதிராக இருந்து ஆயுதம்


*10 ம் பக்கம் பார்க்க*

# அமைச்சர் ஆறுமுகம் பதில் கூறட்டும்!
## 400/= ரூபா சம்பள உயர்வு எங்கே?

ஒக்டோபர் மாதம் எல்லோருக்கும் வழங்கப்பட்ட 400 ரூபா சம்பள உயர்வு தோட்டத் தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று இ.தொ.கா. வேலை நிறுத்தப் போராட்டமொன்றை தொடக்கி மிகவும் நாசுக்காக அதனைக் காட்டிக்கொடுத்தது. அதனால் தேர்தலில் பாதிப்பு ஏற்படலாம் என்பதால் தேர்தலன்று காலை இலங்கை வானொலி செய்தியின் மூலம் அச்சம்பள உயர்வு தோட்டத் தொழிலாளர்களுக்கும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் முயற்சியாலேயே அச்சம்பள உயர்வு கிடைத்திருப்பதாகப் பிரசாரம் செய்யப்பட்டது.

இதேபோன்று தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்தம் 121 ரூபா சம்பளமாக கிடைக்கும் என்றும் கூறப்பட்டது. சம்பள உயர்வுக்காக நடைபெற்ற போராட்டத்தின் பின்னர் இலங்கை முதலாளிமார்

*7 ம் பக்கம் பார்க்க*



# தனி அடையாள அட்டையை உடன் நிறுத்து!

மலையகத் தமிழ் மக்களுக்கென பிரத்தியேகமான அடையாள அட்டைகளை விநியோகிக்க வேண்டும் என பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான டி.எம். ஜயரட்ன தெரி வித்திருந்தார். கண்டிப்பகுதிகளில் பொலிசார் அவ்வாறான அடையாள அட்டைகளை விநியோகிக்க வேண்டும் என்றும் அதற்கான படிவங்களை விநியோகித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

அடையாள அட்டைகளை வழங்குவதற்கு ஆட்பதிவு திணைக்களமே பொறுப்பாக இருக்கிறது. மலையகத் தமிழ் மக்களில் அறுபது சதவீதத்தினருக்கு இன்னும் தேசிய அடையாள அட்டைகள் விநியோகிக்கப்படவில்லை. சீரற்ற நிர்வாக முறைமையாலும், தோட்டத்துரைமார்களினதும் கிராமசேவையாளர்களின் ஒத்துழைப்பின்மையாலும் அடையாள அட்டைகள் விநியோகிக்கப்படாமல் இருக்கின்றன.

தேசிய அடையாள அட்டைகளை வழங்காமல் அதற்குப் பதிலாக இனரீதியாக ஒதுக்கிக் காட்டக்கூடிய புதியவகையான அடையாள அட்டைகளை வழங்குவதென்பது இனஒதுக்கலின் இன்னொரு நடைமுறையாகும். மலையகத்தமிழ் மக்களை சமத்துவமாக கணிக்காமல் குறைவாக கணிப்பதன் ஒரு வெளிப்பாடாக இது அமையும். மலையகத் தமிழ் மக்கள் மீது தொடர்ந்து செய்து வரும் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தின் இன்னொரு விருப்பமாகவோ தேவையாகவோதான் இதனைக் கொள்ளல் வேண்டும்.

ஜேர்மனியில் யூதர்களுக்கு ஹிட்லர் வேறுவிதமான அடையாள அட்டையை அறிமுகம் செய்தமையையே இது நினைவு படுத்துகிறது.

இந்த முயற்சியை மலையக அமைப்புகளும் இடதுசாரி, ஜனநாயக கட்சிகளும், மனித உரிமைகள் அமைப்புக்களும் எதிர்த்துள்ளன.

எஸ். டபிள்யூ. ஆர், டி. பண்டாரநாயக்காவின் ஆட்சிக்காலத்தில் இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்களுக்கு வேறுவிதமான பதிவு முறைகளை அறிமுகம் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதற்கு எதிராக பலமான எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டதனால் அந்த நடிவடிக்கைகள் கைவிடப்பட்டன. அதன் மறு வடிவமாகவே தனி அடையாள அட்டை விடயம் வந்துள்ளது.

புதிய விதமான அடையாள அட்டைகளை வழங்குவதற்காக எடுக்கப் படும் முயற்சிகளுக்கு எதிராக வலுவான எதிர்ப்புகள் தெரிவிக்கப்படும்போது அவை கைவிடப்படலாம். இல்லாவிட்டால் அவை நடைமுறைக்கு வரும். அதனால் மலையகத் தமிழ் மக்கள் பல்வேறுவிதமான பாகுபாடுகளுக்கும் அடக்குமுறைகளுக்கும் ஆளாகவேண்டிவரும்.

சட்டத்திற்கு முன் எல்லோரும் சமமாக நடத்தப்பட [illegible] அரசியலமைப்பில் உறுதி [illegible] மலையகத் தமிழ் மக்கள் [illegible] தனி அடையாள அட்டை [illegible] குரல் [illegible]

நன்றி - நூலகத்திட்டம்




# நிமல்ராஜனை ஏன் கொன்றார்கள் ?

அன்று ஒக்டோபர் 19ம் திகதி இலங்கைப் பாராளுமன்றத்திற்கு ஜனநாயகம் சுதந்திரம் சர்வசன வாக்குரிமை என்னபவற்றின் பெயரால் பொதுத் தேர்தல் நடைபெற்ற ஒன்பதாவது நாள். இரவின் மடியில் மட்டுமன்றி ஊரடங்கின் பிடியிலும் குடாநாடு இறுகி நிற்கிறது. நேரம் 9 மணியைத் தாண்டிக் கொண்டிருக்கிறது. காவலரண்களில் ராணுவம் பொலீஸ் கண்விழித்து கடமை செய்து கொண்டிருக்கிறார்கள்.

நாடறிந்த பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமல்ராஜன் தனது யாழ்ப்பாணம் சுண்டிக்குளி இல்லத்தில் உள் நாட்டு வெளிநாட்டு ஊடகங்களுக்காக செய்தி எழுதிக் கொண்டிருக்கிறார். காவலரணுக்கு அண்மித்ததாக இருந்த நிமலராஜனின் வீட்டிற்குள் கொலை காரர்கள் புகுந்து கொள்கிறார்கள். தந்தைக்கு வெட்டு தனயனை நோக்கி துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்படுகின்றன. குடாநாட்டு மக்களின் அன்றாடச் சோகக் கதைகளை செய்திகளாகச் செய்தித் தொகுப்புக்களாக உள்நாட்டு உலக ஊடகங்களுக்கு வழங்கி வந்த பத்திரிகையாளர் நிமல்ராஜனின் உயிர் பறிக்கப்படுகிறது. அவரது பேனாவும் வெள்ளைத் தாள்களும் செய்திகளும் இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கப்படுகிறது.

கொலை வெறியர்களுக்கு இரத்தம் தாகம் அடங்கவில்லை. மீண்டும் கைக்குண்டு வீச்சு நடாத்துகிறார்கள். மனைவி பிள்ளைகள் மயிரிழையில் தவறிக் கொண்டார்கள். கொலைக் களம் ஒன்றில் வெறியாடிய கூட்டம் ஊரடங்கை ஊடறுத்து காவலரண்களைக் கடந்து தம் இருப்பிடம் சென்றடைந்தது. யார் இவர்கள் ?

நிமல்ராஜனைக் கொன்றவர்கள் யார் ? என்பதை மக்கள் அறியவே செய்வார்கள். ஆனால் ஏன் கொன்றார்கள் என்பதே மிக



முக்கியமானதாகும். யுத்தமும் நெருக்கடிகளும் துன்பச் சுமைகளும் சோகநிகழ்வுகளும் மிக்க யாழ் குடாநாட்டுச் சூழலில் மக்கள் சார்பான செய்திகளை உடனுக்குடன் பத்திரிகைகளுக்கும் உலக செய்தி ஊடகங்களுக்கும் வழங்கி வந்தவர் நிமல்ராஜன் பேரினவாத ஒடுக்குமுறை அரசியல் அடாவடித்தனம், ஊழல் அரசியல், துஷ்பிரயோக நிர்வாக நடவடிக்கைகள் போன்றவற்றை அவ்வப்போது தயக்கமின்றி துணிவுடன் வெளி உலகிற்கு செய்தி வடிவில் கொடுத்து வந்தவர் நிமல்ராஜன். அவரது செய்திக்கு கனதியும் தனித்துவமும் இருந்து வந்தது. அவரின் துணிவு மிக்க பத்திரிகைத் தொழிலால் மக்கள் விரோத அரசியல் சக்திகளின் வன்மமான எதிர்ப்புக்கு ஆளானார். பல தடவைகள் அச்சுறுத்தப்பட்டு எச்சரிக்கப்பட்டார். அத்தகைய அடாவடித்தன ஆயுத கலாசார இயக்கம் ஒன்றினால் சில வருடங்களுக்கு முன்பு தான் அழைத்துச் செல்லப்பட்டு மரணத்தின் விளிம்பு வரை சென்று திரும்பிய திகிலூட்டும் சம்பவத்தை நிமல்ராஜன் கொல்லப்படுவதற்கு இரண்டு வாரங்கள் முன்பாகக் கூறியிருந்தார் என அறிய முடிகின்றது.

அன்று ஐக்கிய தேசியக் கட்சியின் இருண்ட ஆட்சியில் ஆற்றலும் துணிவும் கொண்ட இளம் பத்திரிகையாளர் றிச்சேட் டி சொய்ஸா கடத்திச் செல்லப்பட்டு கொல்லப்பட்டார். இன்று பொதுசன ஐக்கிய முன்னணியின் இரண்டாவது ஆட்சிக்கால வரவோடு வடக்கில் ஆற்றலும் துணிவும் மிக்க இளம் பத்திரியையாளர் நிமல்ராஜன் படுகொலை செய்யப் பட்டுள்ளார். வெறும் கண்துடைப்பு உத்தரவுகளும் கண்டன அறிக்கைகளும் எதனைச் சாதித்துக் கொண்டன. இன்றுவரை கொலைகாரர்கள் கண்டு பிடிக்கப்படவே இல்லை. கள்வனைப் பிடியுங்கள் என்று கள்வனே கூவிக் கொண்டு ஓடிய நிலைதான். ஆனால் என்றோ ஒரு நாள் கொலைகாரர்கள் மக்கள் மன்றத்தில் நிற்கவேண்டியே ஏற்படும்.

ஒரு நிமல்ராஜனின் மூச்சை நிறுத்தி அவனது பேனாவை இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கலாம். ஆனால் ராஜன்கள் தோன்றுவதை எத்தகைய நிமல் கொலைக்காரர்களாலும் தடுக்க முடியாது.

— அருள் —

# நிமலன் கொலையும் அமுக்கப்படுமா ?

தேர்தல் முடிந்த கையோடு வடக்கில் இடம் பெற்ற கொலைகளின் அதிர்வு மறைவதற்குள் கிழக்கில் ஒரு புதிய பாராளுமன்ற உறுப்பினர் கொல்லப்பட்டிருக்கிறார். தமிழர் கூட்டணியின் பட்டியலில் இருந்து தெரிவு செய்யப்பட்ட நிமலன் சவுந்தரநாயகம் பகிரங்க வீதியல் ராணுவ முகாமுக்கு நானூறு மீற்றர் துரத்தில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்.. மோட்டார் சைக்களில் வேகமாக வந்து கொண்டிருந்த இந்தப் பாராளுமன்ற உறுப்பினரைக் காத்திருந்து குறிதவறாது சுட்டு விட்டு இருவர் மறைந்திருக்கிறார்கள் என்று நேரில் கண்டவர்கள் கூறுகிறார்கள். அப்படியானால் இந்தக் கொலையாளிகள் யாராக இருக்க முடியும். வழமையான இனம் தெரியாத நபர்கள் என்ற சொற்தொடருக்குள் இக் கோடூரக் கொலையும் மூடி அமுக்கப்படுமா ? அல்லது உண்மை வெளிவருவதற்கு ஆவன செய்யப்படுமா ? கொலையாளிகளும் கொடிய ஆயுதங்களும் நிறைந்த இந் நாட்டில் அத்தகையவர்களுக்கு ஊக்கமும் உறுதுணையும் வழங்கி நிற்கும் அதிகாரப்பீடங்கள் தமமை வலுப்படுத்திக் கொண்ட இந்த நாட்டில் உண்மைகளும் நீதி நியாயங்களும் செயலிழந்தவைகளாகவே காணப்படுகின்றன.

தமிழர் கூட்டணியின் பட்டியலில் இருந்து தெரிவு செய்யப்பட்ட போதிலும் தன்னை ஒரு வித்தியாசமான மக்கள் சார்பு கொண்ட பாராளுமன்ற உறுப்பினராக்கிக் கொள்ளவே நிமலன் சவுந்தர நாயகம் முழு முயற்சி செய்து வந்தார் என்றே கூறப்படுகின்றது. தனது பாராளுமன்றப் பதவியை தன்னால் முடிந்தளவுக்கு மக்களது நலன்களுக்கு தேவைக்கும் பயன்படுத்தப் போவதாகக் கூறி வந்தவர் என்றும் அறிய முடிகின்றது. அவ்வாறெனில் தமிழர் கூட்டணியின் வழமையான வழிவழிவந்த பழமைவாதப் பாராளுமன்ற உறுப்பினர்களின் நோக்கிலும் போக்கிலும் இருந்து வேறுபட்ட ஒருவரை கொலைவெறியர்கள் கொன்றொழித்துள்ளார்கள்.

இக் கொலைக்கான பின்னணியையும் கொலைகாரர்களையும் சட்டமும் அதன் பாதுகாவலர்களும் கண்டு பிடிப்பார்களா ? என்றே கேட்கவேண்டியே உள்ளது. ஏனெனில் முன்னைய கொலைகளும் பின்னணிகளும் கண்டுபிடிக்கப்படவே இல்லை. ஆனால் மக்களாவது முழு முயற்சி செய்து அதன் உண்மைகளை வெளியே கொண்டுவரல் வேண்டும். ஏனெனில் மக்களது விழிப்பும் துணிவும் தான் கொலைக் கலாசாரத்திற்கு முடிவு கட்டும் ஆற்றல் உடையதாகும்.

*சிவம்.*

## நிமலராஜனுக்கு ஒரு அஞ்சலி

எங்கோ ஒரு வீடு சூறையாடப்படுகிறது
எங்கோ அச் செய்தி வெளிவருகிறது
எங்கோ ஒரு குடிசை தீக்கிரையாகிறது
எங்கோ அச்செய்தி வெளிவருகிறது
எங்கோ ஒரு மனிதன் கடத்தப் படுகிறான்
எங்கோ அச் செய்தி வெளிவருகிறது
எங்கோ ஒருபெண் வன்கலவிக்கு ஆளாகிறாள்
எங்கோ அச் செய்தி வெளியாகிறது
எங்கோ ஊழல்கள், முறைகேடுகள், மோசடிகள் நிகழ்கின்றன
எங்கோ செய்திகளும் வெளிவருகின்றன
எங்கோ ஒரு செய்தியாளன் கொல்லப்படுகிறான்
எங்கோ அச் செய்தியும் வெளியாகிறது
செய்திகள் கொடுஞ் செயல்களை நிறுத்த வில்லை – ஆனால்
கொடுஞ் செயல்களால் செய்திகளை நிறுத்த முடிவதில்லை
இன்றைக்கு எழுதி எதுவும் ஆக வில்லை என்பதால்
இனியும் எழுதாமல் எவரும் இருப்பதில்லை
இன்று இல்லாவிடின் நாளை இல்லாவிடின் மறுநாள்
என்றோ எல்லாமே மாறித்தான் போகும்
அன்று வரையும் அதற்கு அப்பாலும் – என்றைக்கும்
எழுதும் கரங்கள் ஓயப் போவதேயில்லை

~ *சிவசேகரம்*

# நாலும் நடக்கும் உலகிலே

## கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை

தமிழ் மக்கள் இந்தத் தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்று அறிக்கை விடுத்த சிலர் தேர்தல் முடிவில் திருகோணமலைத் தொகுதியில் ஒரு தமிழரும் தெரிவாகாததையிட்டுத் தமிழ்க் கட்சிகள் தமது ஒற்றுமையின்மையால் தமிழர்கட்குத் துரோகம் செய்துவிட்டதாகப் புலம்பித் திட்டியிருக்கிறார்கள்.

பகிஷ்கரிப்பின் தேவை, தேவையின்மை எல்லாவற்றையும் ஒருபக்கம் வைத்து விட்டு இந்தப் புலம்பலின் அர்த்தத்தைப் பார்ப்போமா ? இவர்கள் சொன்னபடி பகிஷ்கரிப்பு நடந்திருந்தால் திருகோணமலையோடு இன்னும் இரண்டு மாவட்டங்களுமல்லவா 'பறிபோயிருக்கும்'.

தங்கள் ஆலோசனையைத் தமிழ் மக்கள் கேட்கக் கூடாது என்று நம்பியா ஆலோசனை வழங்குகிறார்கள்? அல்லது யாரையாவது ஆதரித்து தங்கள் 'நடுநிலைக்கு' ஆபத்தில்லாமல் காப்பாற்றிக் கொள்ளவா பார்க்கிறார்கள். ?

## அன்று வெலிக்கடை இன்ற பிந்துனுவெவ

பண்டாரவளை பிந்துனுவெவ தடுப்பு முகாம் கொலைக்ள 1983 யூலை வெலிக்கடைப் படுகொலைகளை மிஞ்சியன என்பதில் நமக்குச் சந்தேகமில்லை. ஆனால் அதற்கு அரசாங்கத் தரப்பில் செய்தி ஊடகங்கள் தரும் விளக்கங்கள் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுகிற அளவு கொடுமையானவை. இந்தச் சம்பவம் உலகளாவிய மட்டத்தில் அரசாங்கத்திற்கு ஏற்படுத்தப்போகும் அவப்பெயரைத் தடுப்பதற்காக என்ன பொய்யையும் சொல்லாம். ஆனால் ஒவ்வொரு பொய்யும் அரசாங்கத்தினால் தடுப்புக்காவல் முகாம்களில் கூட அரசிடம் சரணடைந்தவர்களைக் காப்பாற்ற இயலாத கையாலாகாத்தனத்தையே மேலும் தெளிவாக்குகிறது.

இனவாத அதிகாரிகளின் தயவால் இத்தகைய தடுப்பு முகாம்களையும் சிறைச்சாலைகளையும் விட்டு வைத்திருக்கிற ஒரு அரசு அந்த அதிகாரிகளின் தவறுகளை மூடிமறைக்கிறபோது அந்த அதிகாரிகளை விட மோசமாகவே நடந்து கொள்கிறது. இனவாத அரசு ஒருபுறம் இருக்கட்டும். 100 நாள் தவனை கொடுத்தும் தவணை கொடுக்காமலும் அரை, முழு மந்திரிப் பதவிகட்காக அதற்கு முட்டுக் கொடுக்கிறவர்கள் இது பற்றி என்ன சொல்லப் போகிறார்கள்.

## சங்கம் சரணம் ஜே.வி.பி.

தம் தேர்தல் விஞ்ஞாபனம் சகிதம் மகாநாயக்க தேரர்களிடம் போய்க் காலில் விழுந்து ஆசி பெற்ற 'மாக்ஸிய வாதிகள்' இந்த ஜே.வி.பியினர். அதுவும் போதாமல், கூட ஒரு படப்பிடிப்பாளரையும் அல்லவா கூட்டிக் கொண்டு போய் தாங்கள் காலில் விழுகிற காட்சியை தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்பியும் உள்ளார்கள். சமசமாஜக்கட்சியின் கொல்வின் மந்திரியான பிறகு கோவிலுக்கு போய் மரியாதை செலுத்தினர். இந்தக் கூட்டம் இப்போது காலில் விழுகிறது. இனி என்ன செய்யுமோ?

## திருகோணமலை பா.உ.

1963ம் ஆண்டுக்குப் பிறகு திருகோணமலைக்குத் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் இருந்ததாகவே சொல்ல முடியாது. 1963 - 1970 காலத்தில் மாணிக்கராஜா அரசியலில் எதுவும் செய்யவில்லை. 1970ல் நேமிநாதன் ஊரில் இருந்தாரா என்று கூட மக்களுக்குத் தெரியாது. 1977 - 1983 சம்பந்தன் யூ. என்.பி. பா. உ.ரா. த.வி.கூ. பா.உ.ரா என்றே யாருக்கும் தெரியாது. தங்கத்துரை வாழ்ந்த காலத்தில் மட்டும் மக்களுக்காகக் கொஞ்சமாவது குரல் கொடுத்தார். ஆனால் த.வி. கூட்டணியில் கையாலாகாத்தனத்திற்கு மேலாக அவரும் எதுவும் செய்யவில்லை. 1997ல் அவரது கொலைக்குப் பிறகு மறுபடி சந்பந்தன் நாட்டில் இருக்கிறாரா ? இல்லையா ? என்று கூடத் தெரியாதளவுக்கு அஞ்ஞாதவாசம் எனவே, தமிழ் மக்களை பொறுத்தவரை நிலைமையில் ஒரு மாற்றமும் இல்லை எனலாம்.

## பேரம் பேசும் வலிமை

இவ்வருட முற்பகுதியில் தேர்தல் சட்டத்தில் மாற்றங்கள் பற்றிப் பேசப்பட்ட போது அது சிறுபான்மைத் தேசிய இனங்களின் பேரம் பேசும் வலிமைக்குப் பாதகமானது என்று சில மறுப்புக் குரல்கள் எழுப்பப்பட்டன.

இப்போது பேரம் பேசும் வலிமையுடன் பாராளுமன்றத்துக்குப் போய் இருக்கிறவர்கள் எதற்காகப் பேரம் பேசுகிறார்கள். இவர்கள் பேரம் பேசி வாங்கிய பதவிகளால் எவருக்கு நன்மை ?

இவர்களது பேரம் பேசுதலால் சிங்கள மக்கள் நடுவே சிறுபான்மை தேசிய இனங்கள் தான் அதிகாரம் செலுத்துகின்றன என்ற மயக்கமான இனவாதப் பிரசாரம் மேலும் எடுபடுகிறது என்பதை விட முக்கியமான அரசியல் ரீதியான தாக்கம் என்ன ஏற்பட்டு இருக்கிறது ?

## எச்சரிக்கை : இக் கருத்திற் தமிழ்க் கலப்பு உள்ளது

டெய்லி நியூஸில் ஜுலை மாதம் பேராசிரியர் பிறையன் செனவிரத்ன தேசிய இனப்பிரச்சனை தொடர்பாக எழுதிய ஒரு கட்டுரை வந்தது. முன்பு இலங்கையில் மருத்துவப் பேராசிரியராக இருந்த பேராசிரியர் செனவிரத்ன இப்போது அவுஸ்திரேலியாவல் உள்ளார். அன்றும் இன்றும் இனவாத சிந்தனைகளை எதிர்ப்பதில் அவர் உறுதியாகவே இருந்து வந்துள்ளார்.

அவரது டெயிலி நியூஸ் கட்டுரையின் அடியில் ஒரு குறிப்பு இருந்தது. பேராசிரியர் பிறையன் செனவிரத்ன ஒரு பணக்காரத் தமிழ் வர்த்தகரின் மகளை மணமுடித்துள்ளார் என்று அதிற் கூறப்பட்டிருந்தது.

இது ஏன் ? இப்படியான குறிப்புக்கள் பிறர் பற்றி வருவதுண்டா ? உதாரணமாக கதிர்காமர் சிங்களப் பெண்ணை மணந்துள்ளார் என்பதை டெய்லி நியூஸ் ஒழுங்காக நினைவூட்டலாமே.!

மேற்படி இனவாதக் கருத்து டெய்லி நியூஸ் ஏட்டுக்கு லூஷியன் ராஜகருணாநாயக்க ஆசிரியர் பொறுப்பு ஏற்று பின்பு வெளியானது என்பது கவனிக்கத்தக்கது. 1994ல் யூ. என். பியை எதிர்த்து, பொது சன ஐக்கிய முன்னணியை ஆதரித்து பின்பு அதை விமர்சித்து வந்த இந்தத் தாராளவாதப் பத்திரிகையாளர் திடீரென அரசாங்கத்தின் செல்லப்பிள்ளையாகியது எவ்விதம்.

டெய்லி நியூஸ் இன்று சாக்கடை ஏடாகி விட்டது. அரசாங்கத் தயவில் பதவி ஏற்பவர் எவராலும் அதன் நாற்றத்தை போக்க முடியாது.

நன்றி - நூலகத்திட்டம்




# புதிய பூமி

PUTHIYA POOMI

சுற்று 07 நவம்./டிசம்பர் 2000 பக்கம் 10 விலை 10/= சுழற்சி 37

S. 47, 3வது மாடி, கொழும்பு மத்திய சந்தைக்கட்டிடத் தொகுதி, கொழும்பு 11, இலங்கை. தொலைபேசி இல. 435117, 335844


## அரசாங்கமும் பேச்சுவார்த்தையும்

இவ்வருட பட்ஜட் சமர்ப்பிக்கப் படாமைக்கு காரணம் கால அவகாசம் போதாமை என்று கூறப்படுவதில் எவ்வித உண்மையும் இல்லை. துண்டு விடும் தொகையை நிரப்பிக் கொள்ளுவதற்காக பெறப்பட வேண்டிய வெளிநாட்டுக் கடன்களை உரிய காலத்தில் உறுதி செய்து கொள்ள முடியாமையே முக்கிய அடிப்படைக் காரணமாகும். இவ்வருட வரவு செலவுத்திட்டத்திற்கு வெளிநாட்டுக் கடன்களைப் பெறுவதாயின் அரசாங்கம் நேர்மையான தேர்தலை நடாத்தி அதனுடைய சட்டபூர்வமான செல்லுபடியாகும் தன்மையை உறுதிசெய்ய வேண்டும் என்றும் யுத்தத்தை நிறுத்தி சமாதான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் ஐ.நா.வின் குழு 'சீ' சிபாரிசு செய்திருந்தது.

அதன் அடிப்படையில் இனப்பிரச்சினை தீர்ப்பதற்கான அதிகாரப்பரவலாக்கல் என்ற அத்தியாயத்தைக் கொண்ட புதிய அரசியலமைப்பு மசோதாவை பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தாலும் அதனை நிறைவேற்ற முடியாது கைவிட்டது. உரிய காலத்தில் தேர்தலை நடத்தினாலும் தேர்தல் நீதியாக நேர்மையாக நடைபெற்றதா என்பது எல்லோருக்கும் வெளிச்சமானதே.

அதனால் 'சீ' குழுவின் சிபாரிசை நடைமுறைப்படுத்தாத இடத்திலேயே அரசாங்கம் விடப்பட்டுள்ளது. அதனால் உதவி வழங்கும் நாடுகளின் சாதக்மான பதில்கள் இல்லாத நிலையில் இடைக்கால நிதி அறிக்கை ஒன்றையே இம்முறை அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க இருக்கிறது.

எனினும் நீண்டகாலத்தில் மேற்படி வெளிநாட்டு கடன்கள் இல்லாது அரசாங்கத்தை தொடர முடியாது. அதனால் தேர்தல் வன்முறைகளில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுக்கப்போவதாக பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன் நோர்வேயின் அனுசரணை யுடன் விடுதலைப் புலிகள் இயக்கதத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப்போவதாக அறிவித்துள்ளது. நோர்வே பிரதிநிதி சோல் ஹெய்ம் வன்னிகாட்டிற்கு சென்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

ஜனாபதிபதி, எதிர்கட்சித் தலைவர் மற்றும் அரசியல் கட்சிகளின் தலைவர்களையும் சந்தித்துள்ளார். நோர்வே சென்று விட்டு பின்னர் இந்தியாவுக்கு சென்று இந்திய அரச தலைவர்களையும் சந்தித்துள்ளார்.

ஐரோப்பிய நாடுகளின் அழுத்தங்கள் தொடர்ந்து இருந்து வந்தாலும் கடன் வழங்கும் நாடுகளிடம் நன்மதிப்பை பெறவேண்டியது இலங்கை அரசாங்த்திற்கு மிகவும் அவசியமாகும். அதனால் சோல் ஹெய்ம்மின் முயற்சிகளை தொடர வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பதாகக் கூறுகிறது. அதேவேளை விடுதலைப் புலிகள் நேர்மையாக சம்மதம் தெரிவிக்கவில்லை என்ற அர்த்தத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைவர்கள் சிலர் வெளிப்படையாகவே கருத்துக்களை தெரிவித்தும் வருகின்றனர்.

நோர்வேயின் அனுசரணையுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதை தீவிர சிங்கள இனவாதிகள் எதிர்த்து வருகின்றனர். சிஹல உருமய கட்சி மறியல் போராட்டங்களை செய்து வருகிறது. ஜே. வி. பியும் எதிர்ப்பியக்கங்களை நடத்திவருகிறது. பிரதம மந்நதிரி ரட்ணசிறி விக்கிரமநாயக்க நோர்வே சமாதான முயற்சிகள் பற்றி அக்கறையற்றவராகவே இருக்கிறார். அதனாலேயே அம்முயற்சிகள் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்று தெரிவித்துள்ளார். வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரும் கூட முரண்பட்ட கருத்துக் களையே தெரிவித்து வருகிறார்.

இது இவ்வாறிருக்க பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் பிட்டர் ஹெய்ன் இலங்கைக்கு விஜயம் செய்து கூறியுள்ள கருத்துக்கள் பேரினவாத்தை ஆட்டியுள்ளது. பிளவுபடாத இலங்கையில் சுயாட்சியை புலிகள் இயக்கம் ஏற்றுக்கொள்ளும். அதனை உறுதி செய்வதற்கான பேச்சுவார்த்தைகளை அரசாங்கம் ஆரம்பிக்க வேண்டும் என்று கூறியுள்ள அவர் யுத்தத்தை நிறுத்தி பேச்சுவார்த்தையை மேற்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளார்.

ஆனால் யுத்தத்தை நிறுத்துவதற்கு இராணுவம் தயாரில்லை என்பதை இராணுவ மேஜர் ஜெனரல் பல்லேகல்ல சில நாட்களுக்கு முன்பு தெரிவித்திருந்தமை தெரிந்ததே. சிஹல உருமய போன்ற சிங்கள பாசிச சக்திகளும், ஜே.வி.பியும் இராணுவ அதிகாரிகளும் பௌத்த பீடாதிபதிகளும் நோர்வே சமாதான முயற்சிகளை வெவ்வேறு மட்டங்களில் எதிர்த்து வருகின்றமையை காண முடியும். அதேவேளை பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பலமான அரசாங்கமாகவும் இல்லை.

சமாதான முயற்சிகளை மேற்கொள்ள அரசாங்கம் வெளிநாடுகளினால் அழுத்தப்பட்டு வருகிறது. விடுதலை புலிகள் இயக்கம் பேசுவதற்கான விருப்பத்தை தெரிவித்துள்ளது. இது பேச்சுவார்த்தைக்கான முயற்சிகளை முன்தள்ளுவதாக அமையும். பேச்சுவார்த்தையை தொடர்ந்து நடத்துவதற்கு அதனை எதிர்க்கும் சக்திகள் எந்தளவுக்கு விட்டுக்கொடுக்கும் என்பதும் அவற்றை மீறி அரசாங்கம் எவ்வாறு முன்செல்லும் என்பதும் பிரச்சினையாகவே இருக்கப்போகிறது. பேச்சுவார்த்தையின் மூலம் இணக்கம் காணப்பட்டால் அதனை நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியங்கள் எப்படியிருக்கும் ?

பிரச்சினையான சூழ்நிலைகளிலேயே சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டிவரும் என்பதை மட்டும் முன்னுணர்வதில் சிரமமிருக்காது. சமாதான பேச்சுவார்த்தைகளின் மூலமே அரசியல் தீர்வை அடைய முடியும் என்பதிலும் இரண்டு பேச்சுக்கு இடமிருக்க முடியாது.

எது எவ்வாறிருப்பினும் இலங்கையின் இனப்பிரச்சினையில் தமிழ் மக்களுடைய அபிலாஷைகள் உறுதிசெய்யப்பட வேண்டும் என்று கருத்து பலமடைந்து வருவது தெளிவாகத் தெரிகிறது. அதனால் சமாதான பேச்சுவார்த்தைபற்றியும் அவற்றை முன்னெடுக்க வேண்டிய வழிமுறைகள் பற்றியும் தமிழ் மக்கள் சார்பிலும் இடதுசாரி ஜனநாயக சக்திகளினாலும் பொதுவான உடன்பாடென்று ஏற்படுவது அவசியமாகிறது. யுத்த எதிர்ப்பு இயக்கங்களுக்கும் சமாதான இயக்கங்களுக்கும் நிறையவே வேலைகள் இருக்கின்றன.

இதுவரை யுத்த எதிர்ப்பையும் அரசியல் தீர்வையும் அதற்கான பேச்சுவார்த்தையின் அவசியத்தையும் வற்புறுத்தி பல்வேறு இயக்கங்களை நடாத்தி வந்த இடதுசாரி ஜனநாயக முற்போக்கு சக்திகள் தீவிர பேரினவாதிகளின் எதிர்ப்புகளை மேவிய வேலைத்திட்டத்தை முன்னெடுக்க வேண்டும். அதற்கான முயற்சிகள் தொடங்கப்படல் வேண்டும்.

*ஆசிரியர் குழு*

## பேரினவாத ஒடுக்கு முறையும் அதன் வர்க்க அடிப்படையும்

இலங்கையின் இனமுரண்பாடு தேசிய இனப் பிரச்சினை ஊடாகப் பிரதான முரண்பாடு என்ற நிலையை ஏற்கனவே அடைந்து நிற்கின்றது. பேரினவாத ஒடுக்குமுறை என்பது அதன் பிரதான வடிவமாகியள்ளது. இவற்றின் அடிப்படை இனத்துவநிலை மட்டுமன்றி வலுவான வர்க்க நலன்களைக் கொண்ட நிலைப்பாடும் ஆகும். இதனைப் புதிய ஜனநாயக கட்சி தனது மூன்றாவது தேசிய காங்கிரஸ் அறிக்கையில் தெளிவாகச் சுட்டிக்காட்டியமை நினைவு கூரத்தக்க தாகும்.

அண்மைக்கால அரசியல் வளர்ச்சிப் போக்குகளையும் அவற்றின் வெளிப்பாடுகளையும் நேர்மையுடன் காணும் எவரும் மேற் கூறிய பேரினவாத ஒடுக்குமுறை பற்றிய முடிவை மறுத்துரைக்க மாட்டார்கள்.

கடந்து முடிந்த நூற்றாண்டின் ஆரம்பத்துடன் உருவாகிய தேசியவாதத்துடன் கூடவே இனவாதம் முளைகொள்ள ஆரம்பித்து விரைவான வளர்ச்சி பெற்றுக் கொண்டது. இனவாதக் கருத்தியல்களும் ஆரம்பகால செயல் வடிவங்களும் சுதந்திரம் என்று கொள்ளப்பட்ட நிகழ்வுக்குப் பின் முழுமையடைந்து அரசியல் அதிகாரத்தின் ஊடே இனவாதமாகத் தன்னை நிலைநிறுத்திக் கொண்டது.

இவ் இனவாதம் பௌத்த சிங்கள பேரினவாதமாக வளர்க்கப்பட்டதன் மூலம் தமிழ் முஸ்லிம் மலையகத் தேசிய இனங்கள் புறக்கணிக்கப்ட்டு தேசிய வாழ்வில் இருந்து படிப்படியாக ஓரங்கட்டப் பட்டு வந்தன. அவ்வப்போது எழுந்த ஜனநாயக ரீதியான எதிர்ப்புகள் அதிகாரத்தின் கரங்கள் கொண்டு அடக்கப்பட்டன. அவற்றின் வளர்ச்சியாகவே பேரின வாத இராணுவ ஒடுக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டது. தேசிய இனப்பிரச்சினை என்பது ஜனநாயக வழிகளில் குறைந்த பட்சமான தீர்வுகளுக்கு கொண்டு வரப்படுவதற்குப் பதிலாக பகை முரண்பாடாக மாற்றப்பட்டு தீவிர ஒடுக்குமுறையாக்க ப்பட்டது. அது யுத்தவடிவினதாக முன்னெடுக்கப்பட்டது. வர்க்க ஒடுக்கு முறையானது உள்ளார்ந்த ரீதியாகக் காணப்பட்ட அதேவேளை அதனை மேவியதொன்றாக இனஒடுக்கு முறை அதன் உயர்ந்த கட்ட நிலையான பேரினவாத ஒடுக்கு முறை என்ற நிலைக்கு கடந்த கால நூற்றாண்டு காலத்தில் முன்னுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இனமுரண்பாட்டிற்கான கருத்தியல்களும் அதன் உயர்ந்த கட்ட நடைமுறையான பேரினவாத ஒடுக்குமுறைச் சிந்தனை வீச்சு பௌத்த சிங்கள உயர் மத பீடங்களிலும், இரண்டு பிரதான ஆளும் வர்க்க கட்சிகளிலும், அதிகார வர்க்க சக்திகளிடமும் இருந்து வருகின்றன. சொத்துடைய சுரண்டும் வர்க்க சக்திகள் தமது இருப்பிற்கும் வளர்ச்சிக்கும் பேரினவாதத்தைக் கைபிடித்து நிற்கின்றன.

பேரினவாத ஒடுக்குமுறைச் சிந்தனையின் வளர்ச்சியும் அதன் வக்கிரம் நிறைந்த செயற்பாடும் அரசு யந்திரத்தின் சகல பகுதிகளையும் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளன. ஆயுதப்படைகள், சிறைச்சாலைகள், நீதிமன்றங்கள் யாவற்றிலும் பேரினவாதச் சிந்தனைகளும் பேரினவாத ஒடுக்குமுறைச் செயற்பாடுகளும் வியாபித்து வருவதை அவதானிக்க முடியும். ஜனநாயகம், சுதந்திரம், மனித உரிமை, சட்டத்தின் முன் சகலரும் சமம் போன்ற வெறும் ஏட்டுரைகளை ஒரு புறத்தில் ஒதுக்கி வைத்து விட்டு பேரினவாதச் சிந்தனைகளின் அடிப்படையிலான ஒடுக்கு முறையை நியாயப்படுத்தும் போக்கே மேலோங்கி வருவதை அண்மையை நிகழ்வுகள் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளன.

அன்று வெலிக்கடைச் சிறைச்சாலையில் படுகொலை வெறியாட்டம் நடாத்தி பேரினவாதம் தன்னை வெளிப்படுத்திய வேளை அதற்கு யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற ஒரு தாக்குதல் காரணமாகக் கூறப்பட்டது. ஆனால் அதன் பின் அவ்வப்போது சிறைச்சாலைகளில் தமிழ்ச் சிறைக் கைதிகள் கொல்லப்பட்டதற்கும் சாட்டுப் போக்கே கூறப்பட்டு வந்தது. அண்மையில் பண்டாரவளை பிந்துனுவெவ இளைஞர் புனர்வாழ்வு நிலையத்தில் நடாத்தப்பட்ட கோரமான கொலைகளுக்குப் பின்பும் பேரினவாத ஒடுக்குமுறை பற்றியும் அதன் கேடுகெட்ட வெறித்தனம் பற்றியும் எத்தகைய சளாப்பல் நியாயத்தை முன்வைக்கப் போகிறார்கள். இச்சம்பவத்திற்குப் பின்பு மலையகத்தில் தொடராக இடம் பெற்று வரும் பொலீஸ் இராணுவ அடக்குமுறைபற்றியும் சிங்கள ஆங்கிலப் பத்திரிகைகள் எவ்வாறு பேரினவாதச் சித்தரிப்பை வெளிப்படுத்தி வருவது பற்றியும் பேரினவாத ஆதரவாளர்களான தமிழ் முஸ்லீம் மலையக உயர்வர்க்க சக்திகள் என்ன கூறப் போகிறார்கள்.

> கடந்த நுற்றாண்டின் ஆரம்பத்தில் தோன்றிய தேசியவாதம் பின்பு இனவாதமாக்கப்பட்டு பேரின வாதமாக வளர்ந்து இன்று பேரினவாத ராணுவ ஒடுக்கு முறையாகி நிற்கிறது.

பேரினவாதத்திற்கும் பேரினவாத ஒடுக்குமுறைக்கும் இன அடிப்படையுடன் கூடவே வலிமையான வர்க்க அடிப்படையும் உண்டு. ஆளும் வர்க்க பேரினவாதக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி பொதுசன ஐக்கிய முன்னணி என்பன வற்றின் நிழலில் அரசியல் சீவியம் நடாத்தி வரும் தமிழ் முஸ்லீம் மலையக கட்சிகளின் தலைமைகளுக்கு தமது வர்க்க நலன்களைப் பேணிக் கொள்ளும் தேவை இருக்கிறது. தமது பதவி சொத்து, சுக போகம் வர்க்கத் தேவைகள் என்பனவற்றை பாதுகாப்பதற்கு கொடிய பேரினவாத ஆளும் வர்க்க சக்திகளுக்கு மக்களைப் பலியிட அத்தலைமைகள் தயங்குவதில்லை என்பதையே அண்மைய நிகழ்வுக்ள சகல மக்களுக்கும் தெளிவுபடுத்தி நிற்கின்றன.

சிங்கள மக்கள் சகலருமே பேரினவாதிகளோ அன்றி பேரினவாத ஒடுக்குமுறையாளர்களோ அல்லர். ஆனால் பேரினவாதிகளான மதவாதிகளும், அரசியல் லாபம் தேடுவோர்களும், ஆளும் உயர்வர்க்க நலன்கள் பேணுவோரும் கட்டவிழ்த்து விடும் கேடுகெட்ட பேரினவாதப் பிரச்சாரங்களுக்கு மக்களில் ஒரு பகுதியினர் பலியாகிவரும் சூழல் காணப்படுகின்றது. இது முழுச் சிங்கள மக்களினதும் நலன்களுக்கு பாதகமானதாகும்.

கடந்த கால் நூற்றாண்டு காலத்தை எடுத்து நோக்கினால் பேரினவாதமும் பேரினவாத ராணுவ ஒடுக்குமுறையும் நிறுவன மயப்படுத்தப்பட்டதாகவும் அரசு யந்திரத்தின் சகல பகுதிகளிலும் ஆழப்பதிக்கப்பட்டு வருவதாகவும் காணப்படுகின்றது. அதே வேளை நாட்டைத் தமது பூகோளமயமாதலுக்குள் இறுக்கி வரும் ஏகாதிபத்திய சக்திகள் இப் பேரினவாத ஒடுக்கு முறைக்கு பக்கபலமாக இருந்து ஆசீர்வாதம் வழங்கி வருகின்றன. அவை பேரினவாத ஒடுக்கு முறை யுத்தத்திற்கு சகல ஊக்கமும் ஒத்துழைப்பும் வழங்கி நிற்கின்றன.

இவ் இடத்தில் இனத்துவ நிலையிலும் வர்க்க நிலையிலும் பேரினவாத ஒடுக்கு முறையை எதிர்த்து நிற் பதும் சரியா ன வர்க்கக் கண்ணோட் டத்தில் வழி நின்று அதற் கெதிரான பர ந்த சக்திளின் ஒன்றினைவு டன் போராடு வதும் அவசி யமாகின்றது. இப் போர ாட்டம் தனி யே தேசிய இனவிடுதலை க்கான ஒன்று மட்டுமன்றி ஏகாதிபத்திய முதலாளித்துவ ஒடுக்குமுறைக்கும் எதிரான போராட்டமும் ஆகும்.

ஆதலால் பேரினவாதத்தையும் அதன் ராணுவ ஒடுக்குமுறையையும் குறுகிய தேசியவாதக் கண்ணோட்டத்துடன் மிகச் சிறிய எல்லைகளுக்குள் வைத்து நோக்காது பரந்த தளத்தில் வைத் து நோக்குவதும் வெகுஜன அணிகளைக் கட்டியெழுப்புதும் அவசியமாகின்றது இதில் தமிழ் முஸ் லீ ம் மலையகத் தேசிய இனங்கள் மட்டுமன்றி சிங்களத் தேசிய இன த்தின் உழைக்கும் வர்க்க சக் திகளும் தமது பங்களிப்பை உரியவாறு வழங் குதல் வே ண்டும்.

மூன்றாம் உலக நாடுகளில் தேசியவாதம், இனவாதம், பேரினவாதம் பேரினவாத ஒடுக்குமுறை என்பன ஏகாதிபத்திய சக்திகளால் ஊக்குவிக்கப் பட்டு மோதல்களாகவும் யுத்தங்களாகவும் வளர்க்கப் பட்டுள்ளன. இந் நிலை அவர்களது பல்தேசியக் கம்பனிகள் மூலமான நவகொலனித்துவ மாக்கும் போக்கிற்கு தகுந்த தளத்தை வழங்கி வருகின்றன. இதற்கு இலங்கை சிறந்த உதாரணமாக விளங்குகின்றது. தேசிய இனம் பிரச்சினை காரணமான யுத்தமும் பூகோளமயமாதலிலான தாராளமயம் தனியார் மயமும் எவ்வாறு ஒன்றுக்கொன்று உதவி வந்துள்ளதுடன் முழு மக்களையும் நசுக்குவதில் ஒன்றை ஒன்று சார்ந்தும் வந்துள்ளதையும் கண்டு கொள்வது அவசியமாகின்றது.

பேரினவாத ஒடுக்குமுறை, வர்க்க சுரண்டல் ஒடுக்குமுறை, ஏகாதிபத்திய ஒடுக்குமுறை என்பனவற்றுக் இடையிலான உள்ளார்ந்த உறவு நிலைகளைக் கண்டறிந்து அவற்றின் கோரத் தனங்களை மக்கள் மத்தியில் அம்பலமாக்குதல் வேண்டும். ஒடுக்குமுறை நுகத்தடிகளை மறைப்பதற்கு பரப்பிவரும் பிற்போக்கு கருத்தியல்களையும் கலாச்சார நச்சுப் பரம்பல்களையும் எதிர்த்த பல முனைச் செயற்பாடுகள் இன்றைய சூழலில் அவசியமானவையாகும்

*வெகுஜனன்*

▲ ▲ ▲

நன்றி - நூலகத்திட்டம்



# மலையகத்தில் மூட்டப்பட்ட பேரினவாத நெருப்பு..!

பிந்துனுவெவ முகாம் படுகொலைகளை அடுத்து மலையகத் தமிழ் மக்களிடையே ஏற்பட்டுள்ள அமைதியின்மை அவர்களிடமும், சிங்கள மக்களிடமும் நிலவுகின்ற அச்சம் பதற்றம் என்பனவற்றை போக்க சரியான பன்முக நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் ருவாண்டா நாட்டில் நடைபெற்ற இனப் படுகொலைகள் போல் நடைபெறுவதற்கு வாய்ப்பு இருப்பதாகவே தோன்றுகிறது.

அக்டோபர் 25ம் திகதி நடைபெற்ற பிந்துனுவெவ கொலைகளை கண்டித்து மலையகத்தமிழ் மக்கள் ஒக்டோபர் 29ம் திகதி மாபெரும் எதிர்ப்பியக்கமொனன்றை மேற்கொண்டனர். மலையக மக்கள் முன்னணி விட்டிருந்த அழைப்பை ஏற்று புதிய - ஜனநாயக கட்சி உட்பட சில அரசியல் கட்சிகளும் பல தொழிற்சங்கங்களும் அவ்வெதிர்ப்பியக்கத்தில் ஈடுபட்டன. மலையகமெங்கும் கறுப்பு வெள்ளை கொடிகள் பறக்க விடப்பட்டு பூரண ஹர்த்தால் நடத்தப்பட்டது. 29ம் திகதி நன்பகல் தலவாக்கெல்லை நகரில் வீதிமறியல் போராட்டமொன்று நடைபெற்றது. அதில் மலையக மக்கள் முன்னணி தலைவர் சந்திரசேகரன் அதன் செயலாளர் மு. சிவலிங்கம், புதிய ஜனநாயக கட்சியின் பொதுச் செயலாளர் சி. கா. செந்திவேல் தேசிய அமைப்பாளர் இ. தம்மையா உட்பட பலர் உரையாற்றினர்.

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் உரையாற்றிக் கொண்டிருக்கும்போது மோட்டார் சைக்கிளில் அங்கு வந்த சிங்கள இனத்தை சேர்ந்த ஒருவனால் குழப்பநிலைமை தோற்றுவிக்கப்பட்டது. அவன் பேரினவாதிகளால் போஷிக்கப்பட்டும் பொலிசாரினாலும் பாதுகாப்பு படையினராலும் பாதுகாப்பளிக்கபட்டு இருந்தான். அப்போது மறியல் போராட்டம் நடைபெற்ற இடத்தை நோக்கி ஊர்வலயாக வந்த சிலரால் தலவாக்கெல்லை நகரிலுள்ள கடைகள் தாக்கப்பட்டன. அதனையடுத்து பொலிசாரும் பாதுகாப்பு படையினரும் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். அதனால் மறியல் போராட்டத்தில் கலந்து கொண்ட 4 பேர் உயிரிழந்தனர். பல பேர் காயமடைந்தனர். அதனை தொடர்ந்து தலவாக்கெல்லையிலிருந்து கலைந்து சென்று கொண்டிருந்த மறியல் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டுள்ளது. இனவாத காடையர் தாக்கியுள்ளனர். தோட்டங்களுக்கு சென்றும் லயங்களை நோக்கியும் ராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். அதனால் ருப் தோட்டத்தில் ஒருவர் கொல்லப்பட்டார். நுவரெலியா பொரலிந்தையில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். வட்டக்கொடை அக்கறைமலையில் ஒரு தமிழ் வயோதிபர் வெட்டிக் கொல்லப்பட்டார். அவரின் வீட்டிலிருந்த இரண்டு பெண்கள் பாலியல் வல்லுறவுக்குட் படுத்தப் பட்டுள்ளனர். அக்கரைப்பத்தனை பகுதி சிங்களவர்களின் வீடுகளும் கடைகளும் தாக்கப்பட்டுள்ளன. கினிகத்தேனையில் தமிழர்களின் கடைகள் எரிக்கப்பட்டுள்ளன.

மலையக மக்கள் முன்னணி தலைவர் கைது செய்யப்பட்டு ஒரு வாரத்திற்கு பின்பு விடுதலை செய்யப்பட்டார். அம்முன்னணியில் செயலாளர் கைது செய்யப்பட்டு 3 தினங்களுக்குப் பிறகு பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

ஆனால் கைது செய்யப்பட்ட பல தோட்ட இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். நாளாந்தம் பலர் கைது செய்யப்பட்ட வண்ணம் இருக்கின்றனர்.

இத்தொடர்ச்சியான நிகழ்ச்சிகளால் தமிழ் மக்கள் கூடுதலான பாதிப்புக்குட்பட்டுள்ளனர். சிங்கள மக்களுக்கு பாதிப்பு குறைவெனினும் பேரினவாத கருத்துக்களால் பெரிதும் பாதிக்கப்பட்ட நிலையில் தலவாக்கெல்லை பகுதியில் தொடர்ச்சியான ரோந்து நடைவடிக்கைகள் அவசியமெனவும், அப்பகுதியில் தங்களின் பாதுகாப்பு கருதி நிரந்தர இராணுவ முகாம் அமைக்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுகின்றனர்.

புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட வேண்டிய காலம் 3 மாதங்களிலிருந்து 9 மாத காலமாகும். ஆனால் இங்கு ஒரு வருடத்துக்கு மேற்பட்ட காலத்திற்கு அதிகமானோர் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

கடந்த 25 ஆம் திகதி தீபாவளி தினத்திற்கு முன்பாக அங்கிருந்த பலர் விடுவிக்கப்படுவார்கள் என்ற எதிர்பார்ப்புடன் இருந்திருக்கின்றனர். அந்த எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை. அவ்வேளை அங்கிருந்தவர்களுக்கு அனுப்பப்பட்ட கடிதங்கள் கொடுக்கப்படவில்லை என்ற உடனடி காரணத்தை கொண்டு அவர்களின் விரக்தியையும் எதிர்ப்பையும் காட்டியுள்ளனர். அதனால் அம்முகாமினுள் 24 ஆம் திகதி குழப்பமான சூழ்நிலை நிலவியது.

25ம் திகதி காலை மீண்டும் வெளியார் கூட்டம்மொன்று முகாமிற்கு வெளியில் கூடி முகாம் மீது கற்களை எறிந்துள்ளனர். பின்னர் முகாமிலிருந்து பொலிசார் உள்ளே செல்ல அவர்களை பின்தொடர்ந்து வெளியார் கூட்டமும் உள்ளே சென்றுள்ளது. அவர்களால் தடுப்புக்காவலில் இருந்தவர்கள் தடிகள், வாள், கத்தி இரும்பு கம்பிகள், போன்றவற்றால் கண்டபடி தாக்கப்பட்டுள்ளனர். 15-20 நிமிடங்களுக்குள் எல்லா நடந்தேறிவிட்டது. அச்சம்பவம் நடைபெறும்போது அங்கிருந்த 41 பேரில் 27 போர் கொல்லப்பட்டனர். ஏனையோர் படுகாயமடைந்துள்ளனர். வெளியாரினால் முகாம் தாக்கப் பட்டுள்ளது. தீவைக்கப்பட்டுள்ளது. அந்த வெளியார் கூட்டம் இவற்றை செய்து முடிக்கும்வரை 69 பொலிசாரின் T56 இயந்திரத்துப்பாக்கிகள் மௌனம் காத்ததேன் ? அச்சம்பவத்தில் ஈடுபட்ட வெளியார் யார்? அவர்களின் பின்னணி என்ன? அவர்களின் செயலுக்குப் லெப்டினட் அபேரட்ணவுக்கும் தொடர்பிருந்ததா ?

பிந்துனுவெவ முகாம் அகற்ற வேண்டும் என்று கோரி சிங்களமொழியில் எழுதப்பட்டிருந்த இனவாதத்தை தூண்டும் போஸ்டர்கள் பண்டாரவளை நகரில் 24ம் திகதி இரவு ஒட்டப்பட்டிருந்தன. அப்போஸ்டர்களை ஒட்டியவர்கள் யார் ? அவர்களுக்கும் முகம் தாக்கப்பட்டவைக்கும் சம்பந்தம் இருக்க வேண்டும்.

இவ்விடயங்களை தெளிவுபடுத்தி மனித உரிமைகள் ஆணைக்குழு 18 பக்கங்களிலான இடைக்கால அறிக்கையையும் 165 பக்கங்களிலான பிரதான அறிக்கையையும் தயாரித்துள்ளது. அது உத்தியோகபூர்வமாக இன்னும் வெளியிடப்படவில்லை. முகாம் தாக்கப்பட்டமைக்காக அரசாங்கத்தின் மீதும் பொலிசாரின் மீதும் அவ்வறிக்கையில் கடும் விமர்சனம் முன்வைக்கபடப்டுள்ளதாக அறியமுடிகிறது. அக்கொலைகள் மலையகத்தமிழ் மக்கள் வாழ்கின்ற மண்ணில் நிகழ்ந்ததாலும் தமிழர்கள் கொல்லப்பட்டதாலும் குறிப்பாக மலையகத்தை சேர்ந்த இரண்டுபேர் கொல்லப்பட்டதாலும் மலையகத்தமிழ் மக்களிடம் இயல்பான எதிர்ப்புணர்வு ஏற்பட்டது. பிந்துனுவெவ கொலைகளின் பின்னணியில் சிங்கள பௌத்த பேரினவாத பாசிச சக்திகளின் பங்களிப்பு இருந்திருக்கிறது.

அன்மைக்காலமாக மிகவும் வேகமாக செயற்பட்டு வரும் அப்பாசிச சக்திகள் சிங்கள வீரவிதான சிஹல உருமய பயங்கரவாத எதிர்ப்பு தேசிய முன்னணி, புலி எதிர்ப்பு இயக்கம் போன்றவற்றினூடாக வெளிப்படுகின்றன.

மலையகத்தமிழ் மக்களுக்கு பிரசாவுரிமை வழங்குதல் தமிழ் கிராமசேவகர்கள் தமிழ் லிகிதர்கள் நியமனங்கள் என்பவற்றை எதிர்த்து சிங்கள மக்கள் மத்தியில் இனவாத பிரசாரங்கள் முன்னெடுக்கபட்டு வருகின்றன. அத்துடன் தமிழீழ விடுதலை புலிகளுக்கு எதிராக செயற்படுவதாக காட்டிக்கொண்டு இந்நாட்டில் வாழும் தமிழ் மக்களுக்கு எதிரான இனவாத கருத்தியலை கட்டிவளர்த்து வந்திருக்கிறார்கள்.

அவற்றின் வளர்ச்சியாகவே பிந்துனுவெவ தடுப்பு முகாம் தாக்கப்பட்டு தமிழ் இளைஞர்கள் கொலைசெய்யப் பட்டதும், தலவாக்கெல்லை சம்பவத்தை யடுத்து தமிழர்கள் தாக்கப் பட்டதுமாகும்.

அதேபோன்று மலையகத் தமிழ் மக்களின் எதிர்ப்புணர்வு பிந்துனுவெவ கொலைகளுடன் வெளிப் பட்டிருந்தாலும் அதற்கு அடித்தளமாக அமைந்த பலவிடயங்கள் இருக்கின்றன. தோட்டத் தொழிலாளர்களுக்கு தொடர்ச்சியாக சம்பள உயர்வுகள் மறுக்கப்பட்டு வருகின்றன. இளைஞர்களின் வேலையில்லாமை, தோட்டக் கம்பெனிகளின் சுரண்டல் கெடுபிடிகள் போன்றவற்றின் மீதான விரக்தி பிந்துனுவெவ கொலைகளை அடுத்து வெடித்துள்ளது.

தற்போது மலையகத்தில் இருக்கும் நிலைமையை புரிந்து எதிர்காலத்தில் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் இனக்குரோதமின்றி அங்கு வாழ்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தும் நோக்கில் பலவிடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

1. நட்டஈடு வழங்குதல் கொத்தழிவுகளுக்குள்ளாகியுள்ள தமிழர், சிங்கள மக்களுக்கு பாகுபாடின்றி நட்டஈடு வழங்கப்பட வேண்டும். பிந்துனுவெவ முகாமில் கொல்லப் பட்டோரினதும் தலவாக்கொலை சம்பவங்களை அடுத்து கொல்லப்பட்டோரினதும் குடும்பங்களுக்கு போதிய நட்டஈடு வழங்கப்பட வேண்டும்.

2. சட்ட நடவடிக்கை பிந்துனுவெவ கொலைகள், தலவாக்கொலை கொலைகள், சொத்தழிப்பு என்பவற்றுக்கு காரணமானவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3. தமிழ் இளைஞர்களை கண்டபடி கைது செய்வதை நிறுத்தல். 29ஆம் திகதி ஹர்த்தாலிலும், கூட்டங்களிலும், மறியல் போராட்டங்களிலும்கலந்து கொண்ட ஒழுங்குசெய்த மலையகத்தமிழ் இளைஞர்களை தேடி தேடிக் கைது செய்வதையும் தடுத்துவைப்பதையும் நிறுத்த வேண்டும். ,ஏனெனில் அவ்வெதிர்ப்பியக்கங்கள் யாவும் சட்டபூர்வமானவை.

4. பாதுகாப்பு கொடுபிடிகள் : பாதுகாப்பு என்ற பேரில் இராணுவ வீரர்களினாலும் பொலிசாரினாலும் மேற்கொள்ளப்படும் தேடுதல், கைதுகள், போன்ற துன்புறுத்தல்கள் கைவிட வேண்டும். அவற்றினூடாக மலையகத் தமிழ் மக்கள் இனரீதியாக தனிமைப்படுத்தப்ப படுவர். அதினால் ஆபத்தான இனமோதல்களே ஏற்படும்.

5. மேலதிக இராணுவ, பொலிஸ் நடவடிக்கைகள் கைவிடப்படவேண்டும்.

இரண்டு இனங்கள் வாழ்கின்ற இடத்தில் ஒரு இனத்தை சேர்ந்த இராணுவம் 'பாதுகாப்பு' நடவடிக்கைகளில் ஈடுபடல் புதிதாக முகாம்களை அமைத்து நிலைகொள்ளல் என்பன மேலும்

10ம் பக்கம் பர்க்க

## பிந்துனுவெவயிலிருந்து எங்கே ?

சம்பவங்கள் நடந்து ஒரு மாதத்திற்கு மேலாகியும் இரண்டு இனத்துக்குமிடையிலும் பதற்றம் குறைந்த பாடில்லை.

மலையகத்தில் சில இடங்களில் தமிழர்கள் மீதான தாக்குதலுக்கு பின்னணியில் சில பௌத்த குருமார் இருந்துள்ளனர் என்பது தெரியவருகிறது. தலவாக்கெல்லையில் இராணுவ முகாம் போடப்பட வேண்டும் என்ற கோரிக்கையை உயர்த்திப் பிடிப்பவர் தலவாக்கெல்லை பௌத்த விகாரையின் பிரதம மதகுரு. கினிகத்தேனை தாக்குதல்களால் அகதிகளான தமிழர்களுக்கு வட்டவளையில் ஏற்படுத்தப்பட்டிருந்த முகாம் மூடப்படுவதற்கு பின்னணியில் வட்டவளை பௌத்த விகாரையின் பிரதம மதகுரு இருந்திருக்கிறார்.



தமிழர்கள் மீதும் அவர்களின் சொத்துக்கள் மீதும் ஊரடங்கு வேளையில் பாதுகாப்பு படையினரும் பொலிசாரும் கடமையில் இருக்கும்போதே தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. அதற்கு எதிராக எதுவித சட்டநடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. அவற்றுக்கு பொறுப்பானவர்கள் எவரும் கைது செய்யப்பட வில்லை.

பண்டாரவளை பிந்துனுவெவவில் இருக்கும் புனர்வாழ்வு முகாம் என்றபேரில் நடத்தப்பட்ட தடுப்பு முகாமில் கடந்த 25 ஆம் திகதி மிருகத்தனமான கொலைகள் நடக்கும்போது 41 தமிழ் தடுப்புக் காவல் கைதிகள் இருந்துள்ளனர். அவர்களில் 27 பேர் கொல்லப் பட்டுள்ளனர். அந்த முகாமில் 18 வயதுக்கு குறைவானவர்களும் இருந்துள்ளனர். அவர்களில் கணிசமானோர் இராணுவ தேடுதல் நடவடிக்கையின்போது கைது செய்யப்பட்டவர்களாவர்.

அதனையடுத்து அன்று மாலை 6 மணிக்கு குகாமின் பொறுப்பாளரான கெப்டன் வை. பி. அபேரட்ன தடுத்துவைக்கப்பட்டவர்களுடன் கலந்துரையாடலொன்றை நடத்தியுள்ளார். அப்போது தங்களை விடுதலை செய்யும்படி தடுத்து வைக்கப் பட்டிருந்தவர்கள் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டனர். அவ்வேளை அம்முகாமின் உதவிப் பொறுப்பாளர் லெப்டினன்ட் அபேரட்னவும் அங்கிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்களும் தங்களுக்கு பாதுகாப்பில்லை என்று கூறிவிட்டு முகாமை விட்டு வெளியேறியுள்ளனர். லெபடினன்ட் அபேரட்ன அருகிலுள்ள கிராமத்திற்கு சென்று தடுப்புக்காவலில் இருப்போரால் தான் தாக்கப்பட்டு காயப்படுத்தப்பட்டு விட்டதாக தெரிவித்ததாக அறியமுடிகிறது.

அதனை அடுத்து 200-300 வெளியாட்கள் முகாமிற்கு வெளியே நின்று சத்தமிட்டதாகவும் தெரிகிறது. முகாமிற்குள் யாரும் நுழையாமல் தடுப்பதற்காக பொலிசாரும் இராணுவத்தினரும் அங்கு வரவழைக்கப்பட்டனர். பண்டாரவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகளாரி எச். கியூ. ஐ. இரவு 10.30 அவ்விடத்திலிருந்து சென்று விட்டார். இராணுவ வீரர்கள் நள்ளிரவு 1.11 இற்கு அங்கிருந்து சென்று விட்டனர். அதற்கு பிறகு அங்கு முகாமிற்கு வெளியில் காவலுக்காக T56 துப்பாக்கிகள் சகிதம் 69 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் அமர்த்தப்பட்டிருந்தனர்.

## மலையகத்தை ருவாண்டா கொலைக்களம் போல் ஆக்க வேண்டாம்.

நன்றி - நூலகத்திட்டம்



# ஈழத்து முஜிபூர் அரபாத்தாகிறார்

## அண்ணன் காட்டிய வழி (4)

**1970-1977** கால இடைவெளியில் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற அரசியல் திக்கற்றுத் தடுமாறியதன் காரணம் அதற்கு முந்திய ஐந்து வருட காலத்தில் அது யூ. என்.பியுடன் ஏற்படுத்திய நெருக்கமான உறவு. இந்தக் கால இடைவெளியில் தமிழரசுக்கட்சியின் நடத்தையை அவதானித்தால் யூ.என்.பியினதை அண்டியே அது அமைந்திருந்ததை நாம் காணலாம். 1970-71 தரப்படுத்தல் வடக்கில் ஏற்படுத்திய கொந்தளிப்பை எவ்வாறு கையாள்வது என்ற தெளிவு கூட கட்சித் தலைமைக்கு இருக்கவில்லை. பாராளுமன்றத்துக்கு வெளியே விடப்பட்ட அமிர்தலிங்கம் இந்த வாய்ப்பைத் தன்னைச் சூழ ஒரு இளைஞர் அணியை உருவாக்கிப் பயன்படுத்த முயன்றார். ஸ்ரீ.ல.சு. கட்சி ல.ச.ச.க. சோவியத் சார்பு கம்யூனிஸ்ட் கட்சி கூட்டணி எடுத்து வந்த பிற நடைவடிக்கைகள் இளைஞர் மத்தியிலான கொதிப்பைக் கிளறிவிட்டன. கட்சிக்குள்ளே ஒரு கட்சியை நடத்தியவரான அமிர்தலிங்கம் இப்போது கட்சிக்கு வெளியே ஒரு கட்சியை உருவாக்குவதில் முனைப்பாக இருந்தார்.

கட்சிக்கு நேரடியாகக் கட்டுப்படாமல் தனதும் தனக்கு நெருக்கமான சிலரதும் ஆதிக்கத்துக்கு உட்பட்ட ஒரு இளைஞர் அணியை அவர் உருவாக்கிய நோக்கம் கட்சித் தலைமையைத் தன் கைக்குள் கொண்டு வருவது தான் என்று அரசியல் அவதானிகள் கவனிக்காமல் இல்லை. பாராளுமன்ற அரசியற் பேரத்தில் தங்கியிருந்த ஒரு தலைமைப் பீடத்தில் பாராளுமன்ற ஆசனத்தை வெல்லாத ஒருவரால் இடம் பெறுவது கடினம் என்பதில் அமிர்தலிங்கத்துக்குச் சந்தேகமில்லை. எனவே தான், பாராளுமன்றக் கட்சியின் கையாலாகாத் தனத்திற்கு ஈடுகொடுக்குமாறான காரியங்களில் முன் நிற்பதாகத் தன்னை அடையாளங் காட்டுவது அவசியமாயிற்று.


1974 தமிழாராச்சி மாநாட்டு இறுதிநாளில், இலங்கைக்குள் சட்ட விரோதமாகக் கொண்டுவரப்பட்ட ஜனார்த்தனம் என்கிற ஒருவரை முற்றவெளியில் மேடையேற்றி பொலிசுக்கும் அரசுக்கும் சவால் விட்ட வீரராகத் தன்னைக் காட்டிக் கொள்வதே அவரது நோக்கமாக இருந்தது. இதன் பின் விளைவுகள் பற்றிய கவலை அவருக்கு இருந்ததா என்ற கேள்விக்கே இடமில்லை. ஏனெனில் என்ன நடந்தாலும் அவர் ஒரு வீரப் பிரதாப மிக்க தலைவராகவே விளம்பரம் பெற வேண்டினார். மாநாட்டு அசம்பாவிதங்கள் நடந்திராவிட்டால் அவர் அரசாங்கத்தின் கண்ணில் விரலை விட்டு ஆட்டிய வீரராயிருப்பார். அவை நடந்ததால் மக்கள் நடுவே ஏற்பட்ட கோப உணர்வு அவருடைய உடனடியான அரசியல் வளர்ச்சிக்கு உரமிட்டது.

அமிர்தலிங்கத்தால் பல வகைகளிலும் உசுப்பிவிடப்பட்ட சக்திகள் கட்டுக்கு அடங்காமல் போவதைத் தடுக்கத் தன்னையும் அவர்களுள் ஒருவராகக் காட்டிக் கொண்டார். எனவே அவருடைய மேடைப் பேச்சுக்கள் மேலும் மேலும் வீராவேசம் மிக்கவையாகி வந்தன. மறுபுறம், 1974 தமிழாராய்ச்சி மாநாட்டு மரணங்கட்கான பழி முழுவதையும் அரசாங்கத்தின் மீது சுமத்திய அதேவேளை நேரடியான பொறுப்பை முன்னாள் யாழ் மேயர் அல்பிரட் துரையப்பா மீது சுமத்தி துரையப்பாவுக்கு யாழ்ப்பாணத்தில் இருந்த செல்வாக்கை வலுவிழக்கச் செய்யும் முயற்சிகளின் பக்க விளைவு வடக்கின் முதலாவது அரசியற் கொலையாக நடந் தேறியது.

துரையப்பாவின் மீதான கொலை முயற்சி முதல் முறை தோல்வி கண்ட போதே தமிழரசுக் கட்சித் தலைமையும் இளைஞர்களுக்கு நெருக்கமாக இருந்து வந்த அமிர்தலிங்கமும் அதைத் கண்டித்து தொடராமல் தடுத்திருந்தால் வடக்கில் இத்தகைய வன்முறை அரசியலின் வளர்ச்சி நின்றிருக்குமோ தெரியாது. எனினும் அதற்கான தார்மீகப் பொறுப்பை அகிம்சாவாதிகளின் கட்சி ஏற்க வேண்டிய அவல நிலை வந்திராது.

பேரளவில் எனினும் தமிழரசுக் கட்சித் தலைவர் செல்வநாயகத்தின் பொறுப்பில் இருந்த சுதந்திரன் அமிர்தலிங்கத்துக்கு மிக நெருக்கமான சுதந்திரன் ஆசிரியன் கோவை மகேசன், செல்வநாயகத்தின் மகன் சந்திரதாசன், ஈழ வேந்தன் போன்றவர்களாலேயே வழிநடத்தப்பட்டது. 1971ல் வங்காளதேசம் பாகிஸ்தானிலிருந்து பிரிந்து உருவான பின்பு இந்தியாவின் உதவியுடன் அதன் முதல் பிரதமராக வந்து எதிர்கட்சிகளை எல்லாம் கடுமையாக ஒடுக்கியவரான முஜிபுரின் பேர் அமிர்தலிங்கத்துக்குச் சூட்டப்பட்டது. அமிர்தலிங்கம் ஈழத்து முஜ்புரராங்க பட்டம் பெற்றுச் சில காலத்துக்குள்ளேயே முஜிபுரின் செல்வாக்கு மங்கி விட்டது. அவர் வங்காள தேசத்தின் அடக்குமுறை ஆட்சியின் தலைவராகி விட்டார். அவரது அடக்குமுறை யந்திரமாகச் செயற்பட்ட ராணுவம் 1974ல் அவரைக் கொலை செய்து ராணுவ ஆட்சியை உண்டாக்கியது. இதன் பின்பு அமிர்தலிங்கத்தை யாரும் ஈழத்து முஜிபுர் என அழைக்கவில்லை என்றாலும், இந்திய அரசாங்கம் வந்து விடுதலை வாங்கித் தரும் என்ற கனவு மட்டும் தொடர்ந்தது.

அமிர்தலிங்கத்தின் பட்டம் ஈழத்து அரபாத் என மாறியது. முன்பு தமிழரசுக் கட்சித் தலைவர்கள் தமிழர்களை யூதர்களோடு ஒப்பிட்டு இஸ்ரேல் நிறுவப்பட்டதை ஒரு பெரிய விடுதலை நிகழ்வாகக் காட்டிவந்தார்கள். இஸ்ரேல் உருவான கதையை தமிழில் மொழிபெயர்த்து சுதந்திரன் வெளியிட்டு வந்தது. இஸ்ரேலை ஏகாதிபத்திய சார்பு ஒடுக்குமுறை ஆட்சியாகத் தமிழ் மக்கள் அடையாளங் காணத் தொடங்கியதற்கு இடதுசாரிகளின் அரசியற் பிரசாரமும் குறிப்பாக மாக்ஸிய லெனினிஸ சக்திகளின் அரசியற் செயற்பாடும் முக்கிய காரணமெனலாம். இந்த நிலையில் முஜிபுரும் பிழைத்துப் போனபின்பு அமிர்தலிங்கத்தை ஹோ சி மின் என்றோ வோ ஷயென் கியாப் என்றோ சே கெவரா என்றோ அழைக்க முடியாதளவுக்கு அவரது மாக்ஸிஸ எதிர்ப்பு கொடிகட்டிப் பறந்தது. எனவே



அவர் ஈழத்து அரபாத் ஆக்கப்பட்டார். பின்பு அரபாத்துடைய போராட்ட அரசியலுக்கு நடக்க இருந்ததை அவர் முன் கூட்டியே அறிந்திருக்க மாட்டார். என்றாலும் அரபாத்தின் தலைமை சீரழிய முன்னரே அமிர்தலிங்கத்தின் அரசியலின் பொட்டுக்கேடுகள் அம்பலமாகிவிட்டன.

1972 முதல் 1977 வரை வடக்கில் நடந்த தமிழ்த் தேசியவாத வன் செயல்கட்கு அமிர்தலிங்கத்தின் நேரடியான ஆசிகள் இருந்தன. தமிழரசுத் தலைமையும் அவற்றைக் கண்டுகொள்ளவில்லை. குறிப்பாக, துரையப்பா கொலையில் அமிர்தலிங்கமும் ஒரு சந்தேக நபராகக் கருதப்பட்டதை யாரும் புறக்கணிக்க முடியாது.

இவை யாவும் 1960களில் பிற்கூற்றில் சாதியத்துக்கு எதிரான போராட்டத்தை அதன் வன்முறைக்காகக் 'கண்டித்துப் பாராளுமன்றத்தில் முழங்கிய' ஒரு கட்சியும் அதன் பிரசாரப் பீரங்கியும் சம்பந்தப்பட்டவை என்பதை நினைவு கூரும் போது ஒரு சாதாரண தேர்தல் தோல்வி ஒருவரை எப்படி மாற்றி விட்டது என்று வியக்காமல் இருக்க முடியாது.

1974ல் உருவாக்கப்பட்ட தமிழர் ஐக்கிய முன்னணியை யாழ்ப்பாணத்து மேட்டுக் குடிகளின் தலைமையை ஐக்கியப்படுத்தி தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற ஆசனங்கட்கு மேலும் சேதம் இல்லாமல் பாதுகாக்கிற ஒரு முயற்சியாகவே காண வேண்டி உள்ளது. இந்த முன்னணியில் இ.தொ.கா. தலைவர் தொண்டமான் மட்டுமல்லாமல் யு.என்.பி பிரமுகரான கே. டபிள்யூ. தேவநாயகமும் இணைந்திருந்தனர். இதன் அன்றைய நோக்கத்தின் முக்கியமான ஒரு அம்சம், ஸ்ரீ ல.சு. கட்சி தலைமையிலான அரசாங்கத்தை எதிர்த்து முறியடிப்பதில் யு.என்பிக்கு உதவுவது என்பதில் சந்தேகத்துக்கு இடமில்லை. தமிழ் மக்களின் உரிமைகள் எவ்வாறு செல்வது என்பது பற்றிய தெளிவு அதற்கு முன்பிருந்ததை விட எவ்வகையிலும் அதிகம் என்று சொல்ல இடமில்லை.

எவ்வாறாயினும் தனிநாடு பற்றிய குரல்கள் இளைஞர் மத்தியிலும், மறைமுகமாக எனினும் தமிழரசுக் கட்சியின் அதிகாரபூர்வமற்ற, ஏட்டிலும் ஒலிக்கக் கேட்டன. இதற்கு வடிவம் கொடுப்பதற்கு தமிழர் ஐக்கிய முன்னணியின் பங்காளிகள் அனைவரும் ஒத்துழைத்திருக்க முடியாது. எனவே, 1976ல் வட்டுக் கோட்டைத் தீர்மானம் வரை, வெளியான தமிழ் ஈழக் கோரிக்கை காத்திருக்க நேர்ந்தது. 1977ல் நடக்கவிருந்த தேர்தலுக்கு அமைவாக நாட்டின் அரசியலில் ஏற்பட்ட நிகழ்வுகளுடன் யோசித்தே வட்டுக்கோட்டைத் தீர்மானத்தையும் அதன் பின் விளைவுகளையும் நோக்க வேண்டும்.

**இமயவரம்பன்**

# இன ஒடுக்கு முறையும் தமிழரசுக் கட்சியும்.....

## தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் நினைவாக



**இ**ணைப்பாட்சி எனப்படுகின்ற சமஷ்டி ஆட்சி அமைப்பு முறைதான் ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள் வாழுகின்ற இலங்கையைப் போன்ற ஒரு நாட்டுக்கு மிகப் பொருத்தமானதென்று இலங்கைத் தமிழரசுக்கட்சியினர் கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாகத் தங்கள் கொள்கையாகக் கூறிவருகின்றனர்.

சமஷ்டி ஆட்சியை அமைப்பது தான் தங்கள் இலட்சியம் எனக்கூறிவந்த தமிழ் அரசுக்கட்சியினர் 1957-ம் ஆண்டில் காலஞ்சென்ற திரு. எஸ். டபிள்யூ ஆர்.டி. பண்டாரநாயக்கவுடன் செய்து கொண்ட ஓர் ஒப்பந்தத்தில் 'பிரதேச சபைகள்' அமைப்பதற்கும், பின்னர் 1965-ம் ஆண்டில் திரு. டட்லி சேனநாயக்காவுடன் செய்து கொண்ட ஓர் உடன்பாட்டில் 'மாவட்ட சபைகள்' அமைக்கவும் ஒப்புக்கொண்டு சமஷ்டிக் கோஷத்திலிருந்து கீழிறங்கினர். பிரதேச சபைகள் அமைக்கப் படுவதற்கு பெரும் எதிர்ப்பைக் கிளப்பிய டட்லி, ஜே. ஆரின் யு என்.பி. கட்சி பின்னர் மாவட்ட சபைகளுக்கு ஒப்புக் கொண்ட போது திருமதி சிறிமா பண்டாரநாயக்கா, என். எம். பெரேரா, பீட்டர் கெனமன் ஆகிய கூட்டாட்சி வாதிகள் அதைப் பலமாக எதிர்த்தனர். இவர்கள் சமஷ்டிக் கட்சியினரை மட்டுமல்ல, சமஷ்டிக் கோரிக்கையையும் தமிழ் இனத்தையும் கடுமையாகக் கண்டித்து வந்தனர். இப்பொழுது இவர்கள் தமிழ் மக்கள் மீது தங்களுக்கு வெறுப்பு இல்லையென்றும், இந்த நாட்டில் உண்மையான சோஷலிஸத்தை உருவாக்கத் தமிழ் மக்கள் ஆதரவும் ஒத்துழைப்பும் தரவேண்டுமென்றும் கோருகின்றனர்.

தமிழர்களின் ஆதரவையும், ஒத்துழைப்பையும் எப்படியாவது பெறவேண்டுமென்ற நோக்கத்துடன் இந்தக் கூட்டாட்சி வாதிகள் குறிப்பாக பீட்டர் கெனமன், இலங்கரத்தினா, வி. பொன்னம்பலம் போன்றவர்கள் சோஷலிஸத்தில் சமஷ்டி சாத்தியமென்றோ, சோஷலிஸத்தில் சமஷ்டி பிரச்சினை தீருமென்றோ கூறிவருகின்றனர்.

அதே நேரம், சமஷ்டியின் பின்தான் சோஷலிஸம் சரிவரும் என்று தமிழரசுக் கட்சியினர் பதிலளிக்கின்றனர். சமஷ்டி பற்றிய வாதப்பிரதிவாதங்கள் பேச்சிலும், எழுத்திலும் முன்னெப்பொழுதையும்விட, இப்பொழுது முக்கியத்துவம் பெற்றிருக்கின்றது.

இந்த நாட்டில், தேசிய இனப் பிரச்சினையொன்றும் பிரதான முரண்பாடுகளில் ஒன்றாகச் கூர்மையடைந்து வருகின்றது என்ற உண்மையையே இந்த வாதப்பிரதிவாதங்கள் உணர்த்துவதாக இருக்கின்றன.

***இன ஒடுக்குமுறையிலிருந்து விடுதலையடையும் பாதை எது? என்னும் தலைப்பில் தோழர் மணியம் 07-03-71ல் எழுதி வெளிவந்த பிரசுரத்தில் இருந்த இப் பகுதி எடுக்கப்பட்டதாகும். அவரது 11வது மறைவு தினம் 27-11-2000 ஆகும்.***

கடந்த பல வருடங்களாகத் தமிழரசுக் கட்சியே தமிழ் மக்களுக்குப் பெரும்பாலும் தலைமை தாங்கி வருகின்றது. இந்தக் கடந்த காலத்தில், ஆட்சி பீடத்திற்கு மாறி மாறி வந்துள்ள சேனநாயக்கா, பண்டாரநாயக்கா குடும்பங்களுடன் தமிழரசுக் கட்சியினர் பேரம் பேசி சில சலுகைகளைப் பெற்று வந்திருக்கின்றனர். பேரப் பேச்சு, எதிர்ப்பு நடவடிக்கை என்பவை இவர்கள் தமது வர்க்க நலனைக் கருத்திற் கொண்டு மேற்கொள்ளப்பட்டவையாகும். தமது வர்க்க நலனுக்கான சமரசங்களுக்கும், சலுகைகளுக்கும் இன்றும் இதன் தலைமை காத்திருப்பினும், தமிழ் மக்கள் தாங்கள் 'இரண்டாந்தரப் பிரசைகளாக நடத்தப்படுகிறோம்' என்றும் இந்த நாட்டில் தமது உரிமைகள் யாவும் ஏனையவர்களைப்போல் பூரணத்துவம் உடையதும் சுதந்திரமுடையதாகவும் இருக்கவேண்டுமென்ற உறுதியான உணர்வுடனும் தான் இருக்கின்றனர். தமிழரசுக் கட்சித் தலைமைப்பீடம் அவ்வப் போது இருந்த அரசாங்கங்களுடன் பேரம் பேசி சலுகை பெற்று ஆதரவு கொடுக்க முனைந்த காலங்களிற் கூட இவர்களுடைய தலைமையைப் பொருட்படுத்தாது தங்களுடைய எதிர்ப்பை ஆணித்தரமாகத் தமிழ் மக்கள் தொடர்ந்து காட்டி வருகின்றனர். தமிழரசுக் கட்சியிலேயே இந்த எதிர்ப்பின் பிரதிபலிப்பைக் காணக்கூடிய சந்தர்ப்பங்கள் பல ஏற்பட்டன. தமிழ்

7ம் பக்கம் பார்க்க

நன்றி - நூலகத்திட்டம்



# பகிஷ்கரிப்பின் அரசியல் -1

## மாற்று அரசியலுக்கான தேவை

**தேசபக்தன்**

நடந்த பாராளுமன்றத் தேர்தல் பற்றி எழுதிய சிலர் அது ஒரு ஜனநாயக மோசடி என்று எழுதினார்கள். தேர்தல் மோசடிகள் புதியனவல்ல. 1977க்குப் பின்பு நாம் நன்றாகவே அவற்றுக்குப் பழக்கப்பட்டுவிட்டோம். தடிமன், இருமல், காய்ச்சல் போன்று அவையும் நமது சூழலில் ஒரு பகுதியாகி விட்டன. பாராளுமன்றத் தேர்தலில் நடக்கிற மோசடி ஜனநாயக மோசடி என்கிற போது பாராளுமன்ற ஜனநாயகம் என்பதே பொதுமக்கள் மீதான மோசடி என்பதையும் நாம் மறந்துவிட முடியாது. முதலாளிய சமூக அமைப்பில் பாராளுமன்ற ஜனநாயகம் என்பது முதலாளிய நலன்களைக் காப்பதற்கான ஒரு நிறுவனம் மட்டுமே. பாராளுமன்ற ஜனநாயகம் என்பது ஜனநாயகமே அல்ல என்பது உண்மை. வேண்டுமானால், தேர்தல் மோசடிகளே நிகழாததாகக் கூறப்படும் நாடுகளின் தேர்தல்களையும் அவதானிக்கலாம். தேர்தலில் ஒருவரோ ஒரு கட்சியோ வெற்றி பெற ஏராளமான பணம் தேவைப்படுகிறது. கடுமையான பிரசார முயற்சி தேவைப்படுகிறது. செய்தி நிறுவனங்களின் உதவியில்லாமல் இது இயலவதில்லை. ஒரு சில பெருமுதலாளிளே ஆதிக்கம் செலுத்தும் செய்தியாளர் உலகில் செய்திகள் முதலாளிய நலன்கட்கு வசதியாகவே வெளியிடப்படுகின்றன. எனவே, தேர்தலில் வென்று அதிகாரத்தைப் பிடிக்க பெரு முதலாலிகளின் தயவு தேவையாகிறது. அதற்குப் பிறகு எப்படி அவர்களுடைய நலன்கட்கு எதிராகச் செயற்பட முடியும் ?

அப்படியும், அதை எல்லாம் மீறித் தேர்தல் மூலம் உண்மையாகவே மக்கள் நலன் சார்ந்த ஒரு ஆட்சி ஏற்படுகிறது என்று வைத்துக் கொள்வோம். அதற்கு என்ன நடக்கிறது என்று பாருங்கள். சிலே நாட்டில் 1972ல் சல்வடோர் அலன்டே ஆட்சி ராணுவச் சதியாளர்களால் கவிழ்க்கப்பட்து. அதற்கு பின்னால் அமெரிக்க ஏகாதிபத்தியம் இருந்தது. 1957ல் கயானா நாட்டில் செட்டி ஜகன் ஆட்சி பாராளுமன்ற ஜனநாயகத்தின் பிறப்பிடம் என்று சொல்லப்படும் பிரித்தானியாவின் மகாராணியாரது ஆணைப்படி கவிழ்க்கப்பட்டது. இந்தியாவின் மாநிலங்களில் முதன் முதலாக ஏற்பட்ட மாற்றுக் கட்சி ஆட்சியான கம்யூனிஸ்ட் ஆட்சி கேரளத்தில் 1957ல் கலைக்கப்பட்டது. அதன் காரணகர்த்தா ஜனநாயகவாதியான நேரு .

ஏகாதிபத்தியம் இப்போதெல்லாம் எடுத்த எடுப்பில் ஜனநாயக ஆட்சிகளைத் தூக்கி எறிவதில்லை. அது பல்வேறு முறைகளில் தன் காரியத்தை நிறைவேற்றிக் கொள்கிறது. ஜனநாயக முறையில் ஆட்சிக்கு வருகிற மாற்றுச் சக்திகளை தன் வழிக்குள் கொண்டு வர முயல்கிறது. அப்படி முடியாத போது, உள்நாட்டுக் கலவரங்களைத் தூண்டிவிடுகிறது. உதாரணமாக நிக்கரா ஷுவா வில் 1980 களில் அமெரிக்க ஆதரவுடன் நடந்த உள்நாட்டுக் கலவரம்.

எந்த விதமாகவும் பாராளுமன்றத்தின் மூலம் அதிகாரத்துக்கு வருகிறவர்களைச் 'சரிக்கட்டுவது' ஏகாதிபத்தியத்துக்கு பழக்கப்பட்ட ஒன்று. பாராளுமன்ற அரசியல் என்பது முதலாளியத்திற்குக் கட்டுபட்ட அரசியல். அது செயற்படுகிற முறையில் மூலதனத்தின் ஆதரவு இல்லாமல் எவரும் அதிகாரத்தைப் பிடிக்க முடியாது. அப்படிப் பிடிப்பதாலும் அதைத் தங்க வைக்க முடியாது. தங்க வைக்க வேண்டும் என்றால் மூலதனத்துடன் சமரசம் செய்தேயாக வேண்டும். எனவே காசைச் சுண்டி விட்டு தலை என்றால் எனக்கு வெற்றி பூ என்றால் உனக்குத் தோல்வி என்பது தான் முதலாளிய பாராளுமன்ற அரசியலின் ஒரே ஒரு அடிப்படைவிதி.

ஆனாலும், பாராளுமன்றத்தின் மூலம் நாட்டில் மாற்றங்களைக் கொண்டு வரலாம் என்று மக்களிடம் எதிர்பார்ப்பு இருக்கிறது. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. முக்கியமான காரணம் ஏதென்றால் மக்கள் முன் உள்ள ஆட்சி தொடர்பான அமைப்புகளில் பாராளுமன்றமே முக்கியமான ஜனநாயக அமைப்பாகத் தோற்றமளிக்கிறது. இதை நம்பவைப்பதற்குப் பாடசாலை நூல்கள் தொட்டுச் செய்தி நிறுவனங்கள் வரை பல் வேறு வழிகளிலும் முதலாளிய சமூக அமைப்பு செயற்படுகிறது. பாராளுமன்ற அமைப்பின் மூலம் சமூக அமைப்பை மாற்றாத வரை அது முதலாளியத்துக்கு ஒரு பாதுகாப்பு அரணாகவே உள்ளது. எனவே முதலாளியம் அதையும் அதை ஒத்த ஜனநாயக அமைப்புக்களையும் ஆதரிக்கிறது. ஏகாதிபத்திய நாடுகளில் பிரதான பாராளுமன்றக் கட்சிகள் எல்லாமே முற்றாக முதலாளிய நலன் பேணும் கட்சிகளே. எனவே அங்கு சீர்திருத்தவாத அரசியலுக்கு மேலாக மக்கள் சார்பான மிரட்டல் எதுவும் இல்லை. அந்தச் சீர்திருத்தங்கள் கூட வறுமைப்பட்ட மக்களது நலனுக்காகப் பெருமுதலாளிகளின் இலாபத்தில் கைவைக்காமல் பல்வேறு நெருக்குவாரங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. இதற்கான உதாரணங்களை ஐரோப்பிய வட அமெரிக்க நாடுகளில் நிறையவே காணலாம். .

மூன்றாமுலக நாடுகளில் பல இடங்களில் நீண்டகால அந்நிய ஆதிக்கம் அல்லது சர்வாதிகார அடக்குமுறை ஆட்சிகளை அடுத்துப் பாராளுமன்ற ஜனநாயகம் நிறுவப்படும் போது மக்கள் மத்தியில் அது பற்றிய நம்பிக்கை மிகவும் இருக்கிறது. ஆனால் காலப் போக்கில் அதுபற்றிய நம்பிக்கை படிப்படியாகத் தளர்ந்து விடுகிறது. பாராளுமன்றத் தேர்தலில் பண பலத்திற்கும் மேலாக ஊழல், வன்முறை போன்றனவும் செயற்படுவதை நாம் காணலாம், பாராளுமன்ற அரசியலின் மீதான வெகுஜன நம்பிக்கையீனம் அரசியல் மீதான நம்பிக்கையீனமாக மக்கள் மத்தியில் மாறுவதை முதலாளியம் வரவேற்றுக் கொள்கிறது. இது அதன் நலனுக்கு. முக்கியமான ஏகாதிபத்திய நலன்கட்கு விரோதமாக மக்கள் கிளர்ந்தெழுவதைத் தடுக்க உகந்ததாகிறது. இங்கேதான் மாற்று அரசியல் பற்றிய கேள்வி எழுகிறது.

அரசியல் மீதான நம்பிக்கையீனம் தானாகவே மாற்று அரசியலை நோக்கி மக்களைத் திருப்பி விடாது. இந்த அவநம்பிக்கை மக்கள் நலன் சார்ந்த அடிப்படையிலான சமூக மாற்றத்திற்கான திசையில் போவதற்கு சமுதாயத்தில் அதற்கு வழிகாட்டக்கூடிய சக்திகள் முன்கூட்டியே வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அல்லாத போது ∴ பாஸிஸம் தலையெடுக்கும் அபாயம் உள்ளது. இதற்கான அடையாளங்களைப் பல மூன்றாமுலக நாடுகளில் அண்மைக் காலங்களில் கண்டுள்ளோம். இதை விட இன்னொரு பாதுகாப்பான பாதையும் ஏகாதிபத்தியத்தின் வசம் இருக்கிறது. இது கடந்த இரண்டு தசாப்தங்களாக வெற்றிகரமாக நடைமுறைப் படுத்தப் படுகிறது. மக்களுடைய எதிர்ப்பின் வேகத்தைத் தணித்து அதன் அரசியல் உள்ளடக்கத்தை மறுதலிப்பதற்காக அரசு சாரா நிறுவனங்கள் எனப்படுவன வெகுவாக ஊக்குவிக்கப்படுகின்றன.

மறுபுறம் எந்தெந்த வெகுஜன அமைப்புகளெல்லாம் மக்களுக்கு அரசியல் விழிப்பை ஏற்படுத்த முடியுமோ அவற்றின் முனைகள் பலவாறும் மழுங்கடிக்கப் படுகின்றன. தொழிற்சங்கங்கள், வெகுசனப் பண்பாட்டு நிறுவனங்கள், பெண்ணுரிமைக்கான அமைப்புக்கள் போன்ற பலவற்றிலும் முழுமையான சமூகப் பார்வை கொண்ட அரசியல் வளர்ச்சி பெறாதபடி முதலாளியம் தன்னாலானதைச் செய்கிறது. தனிமனிதவாதம், குழுவாதம், பிரதேசவாதம், சாதி அரசியல் போன்றவை யாவும் மக்களை வர்க்க அடிப்படையில் பிளவுபடுத்தப் பயன்படுகின்றன.

பல மூன்றாமுலக நாடுகளில் தேசிய இனப்பிரச்சனை திட்டமிட்டமுறையில் இனப்பகையாக வளர்க்கப்பட்டு வந்துள்ளது. குறுகிய இனவாதம், குறிப்பாக பேரினவாத இன ஒடுக்கல், இன்று ஏகாதிபத்தியத்தின் பூரண ஆசியுடனேயே நடைமுறைப் படுத்தப்படுவதை நாம் காணலாம். மேற்கூறிய பின்னணியிலேயே பாராளுமன்ற அரசியலுக்கான ஆக்க பூர்வமான ~~மாற்று~~ வழிகளை நாம் தேட வேண்டியுள்ளது.

⌛⌛⌛

# பொதுத் தேர்தலும் புதிய ஜனநாயக கட்சியும் யாழ் குடா நாடும்

தமக்குத் தேவையும் அவசியமும் ஏற்படும் வேளைகளில் வடக்கு கிழக்கில் தேர்தல்களை நடாத்துவதும் தமக்குப் பாதகமாக அமையும் தேர்தல்களை நடாத்தாமல் விட்டு விடுவதும் ஆளும் பேரினவாதக் கட்சிகளின் நடைமுறையாகும். குறிப்பாக யாழ் குடாநாட்டைப் பொறுத்தவரை அரசாங்கம் மிகவும் உன்னிப்பாகக் கணக்குப் பார்த்தே தேர்தல்களை நடாத்தியும் நடாத்தாமலும் வந்துள்ளது மாகாணசபைத் தேர்தல் என்பது இன்ற வரை எண்ணிக் கூடப் பார்க்கப்படவில்லை. காரணம் தனது விருப்பத்திற்கு மாறான மாகாண ஆட்சி வந்து விட்டால் தொடரும் பேரினவாத செயற்பாட்டிற்கு ஆபத்து என்பதேயாகும்.

பொதுத் தேர்தலை யாழ் குடாநாட்டில் நடாத்துவதில் அரசாங்கம் முழு மூச்சாக இறங்கியதிற்கு காரணம் தனக்கு ஆதரவாக உயர்த்தக் கூடிய கரங்கள் அங்கிருந்து அதிக அளவில் கிடைக்கும் என்ற நம்பிக்கையிலேயேயாகும். எனவே பொதுசன முன்னணி நேரடியாகத் தேர்தல் களத்தில் இறங்காது சகல வளங்களையும் வாரிக்கொடுத்து ஈ.பி.டீ.பி கட்சியை வெற்றி பெற வைக்கமுயன்றது. ஆனாலும்நான்கு ஆசனங்களை மட்டுமே வெற்றி கொள்ள முடிந்தது. அந்த நான்கு ஆசனங்களைப் பெற்ற தேர்தல் தில்லு முல்லு முறைகள் அவப்பெயர் கொண்டதாகவே அமைந்து கொண்டது. இறந்தவர்கள், இடம் பெயர்ந்தவர்கள், வெளிநாடு சென்றவர்கள் எல்லோரும் வாகனங்களில் கும்பல் கும்பலாக வந்து பெயர்களை உரத்துக் கூறி வாக்களித்துச் சென்ற அபூர்வ விந்தையை யாழ் குடாநாட்டுத் தேர்தல் சாவடிகளில் தாராளமாகக் காணமுடிந்தது. "சீ இப்படியும் ஒரு வெட்கம் கெட்ட தேர்தலா ?" எனச் சில வயதான வாக்காளர்கள் சினந்து கொண்டதை அங்கே கேட்க முடிந்தது. இத்தகைய முறைகேடுகளில் ஈ.பி.டி.பி. மட்டுமன்றி பிரதான தேர்தல் கட்சிகளும் ஈடுபட்டன என்பதை மறுக்க இயலாது. கள்ள வாக்களிப்பதற்கு ஒரு நபருக்கு ஆகக் கூடியது 500 ரூபாவும் குறைந்தது 100 ரூபாவும் வழங்கிய பணக்கார கட்சிகளும் தேர்தல் முறைகேட்டை தாராளமாக நடாத்தின. ஆனால் அவை யாவும் ஈ.பி.டி.பி மீதான பழி சுமத்தலின் மறைவில் மறைந்தும் கொண்டன.

இப் பொதுத் தேர்தலில் குடாநாட்டு வாக்களிப்பையும் தேர்தல் முடிவுகளையும் உலகம் உன்னிப்பாக அவதானித்தது. குடாநாட்டில் தேர்தலைப் பகிஷ்கரிக்கும் படியோ நிராகரிக்கும் படியோ விடுதலைப் புலிகள் கேட்க வில்லை. சங்கிலியன் படை என்னும் அமைப்பு மட்டும் ஆயுதக் குழுக்களுக்கும் குறிப்பாக அரசாங்க ஆதரவுக் குழுவுக்கும் வாக்களிக்க வேண்டாம் என்று மட்டும் கேட்டிருந்தது.

ஆனால் எவற்றையும் மக்கள் பொருட்படுத்த வில்லை. யுத்தம் இழைத்து வரும் கொடுமைச் சூழலில் எவர் வந்தாலும் எமக்கு விடிவதில்லை என்ற விரக்தியை பெருமளவு மக்கள் வாக்களிக்காது விட்டதன் மூலம் வெளிப்படுத்திக் கொண்டனர். இத் தேர்தலின் போது குடாநாட்டு மக்களின் அரசியல் உணர்வுகள் மிக மோசமாக மழுங்கடிக்கப் பட்டதன் பிரதிபலிப்பைக் காண முடிந்தது. எப்பொழுதும் உயர்ந்த கட்ட அரசியல் விழிப்புணர்வை ஒவ்வொரு காலகட்டத்திலும் வெவ்வேறு நிலைகளில் வெளிப்படுத்தி வந்த அந்த மக்கள் நமக்கென்ன ? என்ற ஒதுங்கு நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தார்கள். இன, வர்க்க, சாதி போன்ற ஒடுக்கு முறைகளுக்கு எதிராகப் பல் போராட்டங்கள் அரசியல் உணர்வுடன் இடம் பெற்ற யாழ்ப்பாண மண்ணிலே தேர்தலில் தமது தெரிவை உரியவாறு பயன்படுத்தாது மக்கள் ஒதுங்கிக் கொண்டமை தற்செயலானதோ அன்றி அரசியல் விழிப்புணர்வின் உச்சமானதொன்றோ என எவரும் தவறாக எடைபோட்டுவிடக் கூடாது.

இத்தகைய அரசியல் உணர்வற்ற நிலைக்கு அடிப்படைக் காரணம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தோல்வி கண்ட முன்னைய அரசியல் கொள்கைகளும் தலைமைத்துவப் பிற்போக்குத் தனமும் ஆகும். அதன் கையாலாகாத தனத்தின் வெளிப்பாடாகவே இத் தேர்தலில் மங்கிப் போன பழமைவாதத்தை சற்று சுடவைத்தும் சாதியத்தை கிளறியும் ஏனைய பிற்போக்குத் தனங்களைப் பாவித்தும் மூன்று ஆசனங்களை கூட்டணி ஒருவாறு எட்டிப் பிடித்துக் கொண்டது. அதன் பிற்போக்குத் தனம் இதற்குமேல் செல்லுபடியாக முடியாது என்பதை தேர்தல் காலத்திலும் காண முடிந்தது.

அடுத்த காரணம் கடந்த பதினேழு வருடங்களாகத் தமிழ் மக்கள் மத்தியில் ஆயுத இளைஞர் இயக்கங்களாக இயங்கி வந்த அனைத்து சக்திகளும் மக்களின் அரசியல் சிந்தனைக்கும் செயல் பாட்டிற்கும் விதித்து வந்த தடைகளும் கருத்துச் சுதந்திரத்திற்கு துப்பாக்கிகளால் பதில் கூறி வந்த பாதக நிலைமைகளுமாகும். மக்ளுடைய அரசியல் கருத்துக்கள், அவர்களது அபிப்பிராயங்கள் யாவும் மறுதலிக்கப்பட்டு "நாங்கள் சொல்கிறோம். நீங்கள் கேட்க வேண்டியது தான்" "ஆயுதம் தாங்கிய நாமே தலைமை தாங்குபவர்கள்" "மாற்றுக் கருத்துப் பேசினால் மண்டையில் தான் போடுவோம்." இத்தகையவை தான் ஆயுத கலாசாரத்தைக் கொண்ட தமிழ் இளைஞர் இயக்கங்களால் முன்னெடுக்கப்பட்டன. அதன் விளைவாக மக்கள் அரசியல் அரங்கில் இருந்து ஒதுங்கினார்கள். ஓரங்கட்டப்பட்டனர். தமிழ் மக்கள் சாப்பிடுவதற்கு மட்டும் வாய் திறக்க வேண்டும் என்றவாறு நிர்ப்பந்திக்கப் பட்டதன் விளைவு பேரினவாத யுத்த சூழலிலும் மௌனமாக்கப் பட்டனர். ஒரு மக்கள் சமூகத்தை அதன் மத்தியில் இருந்து விடுதலை பெற்றுத் தருவதாகக் கூறிக் கொண்டு அரங்கிற்கு வந்த ஆயுத இயக்கங்களே அடக்கி ஒடுக்கி அரசியல் பேசாத நிலைக்கு உள்ளாக்கியதன் விளைவு இன்று யாருக்குப் பயன்படுகின்றது என்பதை இன்றாவது அந்த இயக்கங்கள் அனைத்தும் உணர்ந்து கொள்வார்களா ?

மற்றொரு புறத்திலே யுத்த சூழலால் பாதிக்கப்பட்டிருக்கும்மக்களிடையே நிவாரணம், உதவி, வேலைவாய்ப்பு, புனரமைப்பு, அபிவிருத்தி, கைது செய்பவர்களை விடுவித்தல் போன்ற சலுகைகளைக் காட்டி மக்கள் சீரழிக்க பட்டதையும் காண முடிந்தது. சரி பிழை உண்மை பொய் என்பனவற்றுக்கும் அப்பால் ஒருவருடைய தோளுக்கு மேலால் மற்றவர் குறுக்கு வழியில் சலுகை பெற்றுக் கொள்வது நடைமுறையாகக்கப்பட்டது. அதிகாரமும் பணமும் அரசோச்சிய இடம் நோக்கி ஒரு பகுதியினரான மக்கள் தள்ளப்பட்டனர். இத் தகைய சீரழிவில் யாழ்ப்பாணத்து நடுத்தர வர்க்கத்தினரின் கணிசமானோர் பங்க கொண்டு தமது பதவிகள், பதவி உயர்வுகள், குறுக்கு வழிகளில் பணம் சேர்க்கும் உயர் பதவிகளில் உள்ளோர், கொள்ளளை லாபம் பெறுவோர் இச் சீரழிவுகளுக்கு வழிகாட்டிகளாக செயல் படும் அவல நிலை அங்க காணப்படுகிறது. இவை அனத்தும் நடந்து முடிந்த தேர்தலின் போது பிரதிபலித்து நின்றன.

இத்தகைய யாழ் குடாநாட்டுச் சூழலிலேயே நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் புதிய ஜனநாயகக் கட்சி பங்க கொள்வது எனத் தீமானித்தது. பாராளுமன்றப் பாதையில் இறங்கி அதன் சேற்றிற்குள் புதைத்து கொள்வதற்காகவோ ஆசனங்களை எப்படியாவது வென்று அதன் சலுகைகளை அனுபவித்துக் கொள்வதற்காகவோ கட்சி மேற்படி முடிவை மேற்கொள்ளவில்லை. குடாநாட்டு மண்ணிலே எமது கட்சியும் அதன் முன்னோடிகளும் வரலாற்றுப் புகழ் மிக்க போராட்டங்களை முன்னெடுத்து வந்துள்ளதுடன் சில முனைகளிலே மக்களது உரிமைகள் வென்றெடுக்கப்பட்டும் இருக்கின்றன. தொழிலாளர் விவசாயிகளின் போராட்டங்களும் சாதியத்திற்கு எதிரான போராட்டங்களும் வர்க்க அடிப்படையில் கம்யூனிஸ்ட்டுக்களின் தலைமையில் உக்கிரமாக முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன.

அத்தகைய பிரதேசத்திலே தமிழ்த் தேசியவாதத்தின் தவறான தலைமைத்துவங்கள் மக்களை பிழையாக வழி நடத்தி அவர்களை சகல வழிகளிலும் முடமாக்கி அரசியல் சிந்தனைகளையும் கருத்துக்களையும் தடுத்து சீரழித்தும் கொண்டனர். அதனால் மக்கள்

*8ம் பக்கம் பார்க்க*

நன்றி - நூலகத்திட்டம்



# பொது. ஐ. முன்னணி ஆட்சியில் ஆகப்போவது எதுவும் இல்லை !

பொதுசன ஐக்கிய முன்னணி மீண்டும் ஆட்சி பீடம் ஏறியுள்ளது. முன்னைய கூட்டாளிக் கட்சிகளை விட இம்முறை தேசிய ஐக்கிய முன்னணி, ஈழ மக்கள் ஜன நாயக கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி ஆகியவற்றையும் இணைத்து ஆட்சி அமைக்கப் பட்டுள்ளது. 116 உறுப்பினர்களுடைய அரசாங்கத்தில் இதுவரை 44 அமைச்சர்கள் 35 பிரதி அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் இத் தொகை அதிகரிக்கப்பட உள்ளது. அமைச்சரவையின் வருடாந்த பராமரிப்புக்கான குறைந்த மதிப்பீட்டுச் செலவுத் தொகை அறுபது கோடி எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

இம் முறை தெரிவு செய்யப்பட்ட 11 வது' பாராளுமன்றத்தை உற்று நோக்கினால் ஒரு உண்மை புலப்படும். அரசாங்கக் கட்சிகள் எதிர்க் கட்சிகளில் உள்ள பெரும் பான்மையான உறுப்பினர்கள் பேரினவாதத்தை உச்சத்தில் கைக் கொள்ளுபவர்களில் இருந்து அதற்கு ஆதரவை வழங்குபவர்கள் வரை தாராளமாக இடம் பெற்றிருக்கின்றனர். இரண்டாவது, பூகோளமயமாதல் என்னும் ஏகாதிபத்திய நச்சுத்திட்டத்திற்கு வாழ்த்துப் பாடி வரவேற்பவர்கள் இரு புறத்திலும் போதியளவு பேர் இருக்கின்றனர். பேரினவாதம் பூகோளமயம் இரண்டுமே இலங்கை நாட்டினதும் மக்களினதும் இன்றைய எதிரிகளாவர். இவற்றை ஆதரிப்போர் யாவரும் மக்கள் விரோதிகளேயாவர்.

பேரினவாதத்தை மிகக் கடுமையாக உள்நாட்டில் நடைமுறைப்படுத்த நிற்பவர் அரசின் பிரதம மந்திரியாவார். அதனை வெளிநாடுகளில் நியாயப்படுத்துவர் வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமராக உள்ளார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் டி.எம். ஜயரத்தினா, மங்கள சமரவீரா போன்றவர்கள் பேரினவாதத்தை முன்னெடுப்பதில் தயக்கம் காட்டாதவர்கள். சமசமாஜக் கட்சியில் பட்டிவீரக்கோன் போன்றவர்கள் பேரினவாதத்திற்கு சாமரை வீசி வாழ்த்துப்பாடுவோர்களே. இம் முறை தனது பௌத்த சோஷலிசம் என்ற உச்சரிப்புடன் பேரினவாதம் பேசிவந்த தினேஷ் குணவர்த்தனாவும் அரசாங்கத்தில் இணைந்து அமைச்சராகி உள்ளார்.

அரசாங்கத் தரப்பில் எவ்வளவிற்கு பேரினவாதம் பேசினாலும் அதைப்பற்றி கவனத்தில் எடுத்துக் கொள்வதற்கு தயாரில்லாத தமிழ், முஸ்லிம் கட்சிகளே அடிமைத்தனமாக அரசில் அங்கம் பெறுகின்றன. அடிமை சேவகம் அவர்களுக்குப் பழக்கப்பட்ட ஒன்றாகியுள்ளது.

எதிர்க்கட்சியில் ரணில் தொடக்கம் பின்வரிசை உறுப்பினர் வரை பேரினவாதத்தின் நாகரீக நாசுக்கான தலைவர்களே. லொக்கு பண்டாரா போன்றவர்கள் அனுபவமிக்க பேரினவாதப் பேச்சுப் பீரங்கிகளாவர். இவர்களது பேச்சுக்கும் செயலுக்கும் உந்துவிசை கொடுப்பதற்கு சிஹல உறுமயக் கட்சியில் இருந்து திலக் கருணாரத்தினா சென்றுள்ளார். இவர்கள் அனைவரையும் ஒரு புறத்தில் ஒதுக்கி விட்டு மிகுந்த இளமைத்துடிப்புடன் சிகப்புப் பேரினவாதம் பேசுவதற்குப் பத்துப் பேர் பாராளுமன்றம் புகுந்துள்ளனர். அவர்கள் தான் விமல் வீரவன்சா தலைமையிலான ஜே.வி.பி யினர். இவர்கள் அண்மைக்காலமாக வெளியிட்டு வரும் கருத்துக்களும் ஆர்ப்பாட்டங்களும் சிஹல உறுமய, வீரவிதான, பயங்கரவாத எதிர்ப்பு தேசிய முன்னணி. போன்ற பேரினவாத அமைப்புகளையும் மிஞ்சி உள்ளதையே காட்டுகின்றன. வெறும் கண்துடைப்புக்கு ஒரு முஸ்லீம் பெண் மணியை பாராளுமன்றத்திற்கு நியமித்துவிட்டு அதன் மறைவில் நின்று பேரினவாதத்தை சிகப்பு நிறத்தில் பேசுகிறார்கள்.

அவ்வாறே பூகோளமயமாதல் தாராளமயம் தனியார் மயத்தை வாழ்த்தி வரவேற்போர் அரசாங்கத் தரப்பிலும் ஐக்கிய தேசியக் கட்சியின் பக்கத்திலும் உள்ளனர். சிலர் வாயளவில் எதிர்த்தாலும் நடைமுறையில் அவற்றைத் தடுத்து நிறுத்த இயலாதவர்களாகவே காணப்படுகின்றனர். பூகோளமயமாதல் மூலம் நாடு அபிவிருத்திப் பாதையில் பயணம் செய்கின்றது எனக் காட்டி நாட்டையும் மக்களையும் ஏகாதிபத்தியத்தின் நவகொலனியப் பிடிக்குள் இறுக்கிக் கொள்வதற்கு இப் பாராளுமன்றமானது வழி காட்டி நிற்கிறது. இதில் அரசாங்கத்திற்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்குமிடையில் நிறைந்த ஒற்றுமையும் ஒரே கண்ணோட்டமுமே காணப்படுகின்றது. அவர்களுக்கிடையிலான ஒரே ஒரு பிரச்சினை அதிகாரக் கதிரையில் எவர் அமர்ந்து கொள்வது என்பதேயாகும்.

பொதுசன ஐக்கிய முன்னணியின் இவ் இரண்டாவது ஆட்சிக்காலத்தில் எந்தவித அதிசயமும் நடந்தேறிவிடப் போவதில்லை. கடந்த ஆறு வருடங்களின் அடிச்சுவட்டில் அக்காலத்தையும் விட மிகமோசமான பொருளாதாரச் சுரண்டலும் அரசியல் ஒடுக்கு முறையும் கொண்ட ஆட்சியாகவே இருக்கப் போகின்றது. பேரினவாதத்தையும் அதன் வெறித்தனமான நடவடிக்கைகளையும் மேலெழும்ப விடாது தடுப்பதற்கோ அன்றி யுத்தத்திற்கு முடிவு கட்டி சமாதானத்தை தோற்றுவிக்கவோ பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்திடம் உரிய வல்லமையான தலைமைத்துவம் இருக்கின்றது என எவராவது எதிர்பார்க்க முனைவது மடமைத்தனமாகும்.

அதேவேளை எதிர்க் கட்சியிடம் எந்தவிதமான மாற்று யோசனைகள் அல்லது செயல் முறைகளை எதிர்பார்ப்பது எல்லாவற்றையும் விட அதி மடமைத்தனமாகும். இவ்விரு ஆளும் வர்க்க அதிகார வெறி பிடித்த உயர்வர்க்க கட்சிகளில் ஒன்றை வித்தியாசமானதாகக் கருதி நம்புவதென்பது மாற்றுவழிதேட இயலாதவர்களின் அடிபணிந்து செல்லும் அடிமைப் புத்தியேயாகும்.

எனவே பேரினவாதத்தை அதன் கொடிய யுத்தத்தை எதிர்த்து நியாயமான அரசியல் தீர்வை சமாதானத்தை வென்றெடுக்க பரந்ததும் உறுதிமிக்கதுமான வெகுஜன போராட்ட இயக்கத்தைத் தோற்றுவிக்க வேண்டும் அதற்கான முன்முயற்சிகளே இன்றைய தேவையாகும். அத்தகைய இயக்கமானது ஏகாதிபத்தியத்தின் சூழ்ச்சிகளை முறியடித்து பூகோளமயமாதல் திட்டங்களை எதிர்த்து முன்னேறுவதாகவும் அமைதல் வேண்டும்.

ஒடுக்கப்படும் தேசிய இனங்களும், சுரண்டி நசுக்கப்படும் தொழிலாளர்கள் விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து அணிதிரள்வதைத் தவிர வேறு மார்க்கம் எதுவும் இருக்க முடியாது.

*5ம் பக்க தொடர்*

## இன ஒடுக்கு

மக்களின் தொடர்ந்த விட்டுக் கொடுக்காத எதிர்ப்பு தமிழரசுக் கட்சியையே தொடர்ந்து எதிர்க்கும் எதிர்ப்பாக மாறி வருவதை உணர்ந்த தமிழரசின் தலைமைப்பீடம் இப்போது புதிய ராகத்தை சோஷலிசத்தில் தேடுகின்றது.

இந்த நாட்டில் தமிழ் மக்கள் தமது மொழி, இன, பொருளாதார, கலாச்சார சுதந்திரத்திற்காகப் போராடி வருகின்றனர். முற்றிலும் நியாயமான இந்தப் போராட்டம் தவறான தலைமைக்குச் சென்றுவிட்டது. இன்றுள்ள அரைக்காலனி அரை நிலப்பிரப்புத்துவ அமைப்பிலேயே பாராளுமன்றப் பாதை மூலம் தமிழருக்கான உரிமைகளைப் பெற முயற்சித்துப் பல ஆண்டுகள் வீணான கஷ்டங்களுக்கும், அநாவசியமான தியாகங்களுக்கும் உள்ளாகி விட்டதையும், தமது பொதுப் போராட்டத்தில் ஏனைய பெரும்பான்மையின மக்களுடன் ஐக்கியப்படுவதற்குப் பதிலாக வேற்றுமையையும், பகைமையையும் வளர்க்கும் நிலையேற்பட்டதையும் தமிழ் மக்கள் உணரத் தலைப்பட்டுள்ளனர்.

ஒரு காலத்தில், தமிழ் மக்களினதும், இளைஞர்களினதும் ஸ்தாபனமாகத் திகழ்ந்த யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் பூரண சுதந்திரக் கோரிக்கையை எழுப்பியது. டொனமூர் திட்டம் பூரண சுதந்திரத்தைக் கொடுக்கவில்லை என்பதற்காக, அத்திட்டத்தின் கீழ் நடந்த பொதுத் தேர்தலைக்கூடத் தமிழ் மக்கள் பகிஷ்கரித்து தமது ஏகாதிபத்திய எதிர்ப்பையும், தேசாபிமானத்தையும் வெளிக் காட்டியுள்ளனர். அத்தகைய பாரம்பரியமுடைய தமிழ் மக்களுக்கு, அவர்களின் தலைவர்கள் என்ற சாட்டில், இவர்களுடைய ஏகாதிபத்திய ஆதரவு நடவடிக்கைகள் அவமானத்தைத் தேடித் தருபவை.

மொழி, இன, பொருளாதார சுதந்திரத்திற்காகப் போராடுகிறோம். என்று கூறிக்கொள்ளும் தமிழரசுத் தலைமை, இதே போன்ற சுதந்திரத்திற்காக ஏகாதிபத்தியக் கொள்ளையர்களின் பிடியிலிருந்து நாட்டை விடுவிக்கப் போராடக்கூடிய வியட்னாம், கம்போடியா, பலஸ்தீன் போன்ற ஆசிய, ஆபிரிக்க, லத்தீன், அமெரிக் நாடுகளின் மக்கள் விடுதலைப் போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை. பதிலுக்கு மௌனத்தைக் காட்டுவது மூலம் ஏகாதிபத்திய துதி கூறுகிறது.

தமிழரசு - தமிழ்க் காங்கிரஸ் தலைமை, வங்கிகள், பெரும் கம்பனிகள், தேயிலை, றப்பர் தோட்டங்களில் பெருமளவு சொத்துக்களையும் நிலங்களையும் கொண்டவர்களான நிலப்பிரப்புத்துவ, முதலாளித்துவ வர்க்கங்களைச் சேர்ந்தவர்கள் ஏகாதிபத்தியத்துடன் கட்டுண்டவர்களே.

எவ்வளவுதான் சுதந்திரத்தைப்பற்றி இவர்கள் பேசிக் கொண்டாலும், தமது வர்க்கத்திற்கு எதிராக தமது வர்க்க அரசு அமைப்பிற்கு எதிராகப் போகமாட்டார்கள்.

எனவேதான் தமிழ் மக்கள் இதுவரையில் பின்பற்றிய பாதையை விட்டு முற்றிலும் மாறுபட்டதும் வெற்றிதரத் தக்கதுமான பாதையைப் பின்பற்ற வேண்டும்.

# ஜே. வி. பி.யிடம் ஒளிரும் சிகப்பு இனவாதம்

இலங்கையில் 1960ம் ஆண்டுக்குப் பின்பு முற்றிலும் பாராளுமன்ற இடதுசாரிகளாக மாறிக் கொண்ட சமசமாஜ கம்யூனிஸ்ட் கட்சிகளில் இனவாத விசம் ஏறிக் பரவிக் கொண்டமை பழைய கதை. அவர்கள் சொல்லாலும் செயலாலும் சோஷலிச இலட்சியங்களைக் கை கழுவியதுடன் "புத்தம் சரணம் சோஷலிசம்' என்று முழுங்காலிட்டுக் கொண்டார்கள். விசுவாசமான பௌத்தர்களாகியதுடன் பேரினவாதத்திற்கு நியாயம் பேசுபவர்களாகவும் மாறிக் கொண்டனர். அத்துடன் இன்று பூகோளமயமாதலின் முகவர்களாகவும் தம்மை மாற்றிக் கொண்டனர்.

அத்தகையவர்களைத் திட்டித் தீர்த்து தம்மை நேர்மையான இளமையான புதிய இடதுசாரிகளாக வடிவமைத்து காட்சி காட்டி அரங்கத்திற்கு வந்தவர்கள் தான் ஜே. வி.பி. என்ற மக்கள் விடுதலை முன்னணியினர். 1971லும் பின்பு 88-89 கால கட்டத்திலும் பல்லாயிரக் கணக்கான இளைஞர் யுவதிகளை தமது தவறான கொள்கை நடைமுறைகளால் அரசு யந்திரத்திற்கு களப்பலி கொடுத்தது மட்டுமன்றி மக்கள் மீது ஆயுத அதிகாரமும் அவ்வப்போது செலுத்திக் கொண்டவர்கள். அவர்களது தவறான போராட்ட நிலைப்பாடு அதன் தலைவர் றோகண விஜயவீரா உட்பட பல உயர் மட்டத் தலைவர்களையே அழித்தொழிக்க காரணமாகியது.

1994ம் ஆண்டிற்குப் பின் மீண்டும் தம்மை மீளக் கட்டமைப்பதில் ஜே.வி.பி கடுமையாக உழைத்து நின்ற போதிலும் தன்னை ஒரு சரியான விமர்சனம் சுய விமர்சனத்திற்கு உட்படுத்திக் கொள்ள வில்லை. அதனால் பழைய பாதையில் தான் அது பயணித்து வந்துள்ளது. தான் மட்டுமே ஒரே ஒரு தூய்மையான இடதுசாரி இயக்கம் என்றும் தன்னால் மட்டுமே தனியான ஒரு இடதுசாரி சோஷலிச அரசாங்கத்தை அமைக்க முடியும் என்றும் கூறி வருகின்றது. ஐக்கிய முன்னணி என்பது அதற்கு உச்சரிக்கக் கூடாத வார்த்தைப் பிரயோகமாகும். இடதுசாரி மட்டுமன்றி தம்மை விட ஜனநாயக சக்திகளே இல்லை என்பதும் அவர்களது தத்வார்த்த நோக்காகும். யாவற்றுக்கும் மேலாக இன்றைய பாராளுமன்றப் பாதை ஊடாகச் சென்று ஆட்சி அதிகாரத்தைப் பெற்று சோஷலிச ஆட்சியை நிறுவுவது அதன் வேலைத்திட்டமும் ஆகும்.

இப்படித்தான் அன்று பிலிப் குணவர்த்தனா என்.எம். பெரேரா, கொல்வின் போன்ற இடதுசாரிப் பீரங்கிகள் சோஷலிசம் காணப் பாராளுமன்றத்தின் மூலம் முயன்றனர். முடியாது போகவே முதலாளித்துவத்தின் பாதுகாவலர்களாகியும் கொண்டனர். அதுமட்டுமன்றி தமது ஆசனங்களைத் தக்க வைக்க அல்லது ஆசனங்களைக் கூட்டிக் கொள்ள இனவாதத்தையும் பயன் படுத்திக் கொள்ள அந்த சோஷலிசவாதிகள் தயங்கவில்லை.

அதே அடிச்சுவட்டில் தான் புதிய இடதுசாரிகளாகத் தம்மை வேஷம் கட்டிக் கொண்டு நிற்கும் ஜே.வி.பி. நடந்து வருகின்றனர். அவர்களது சோஷலிசப் பயணத்தில் பிரதான கருவியாக இருப்பது இனவாதம் தான். அதனை அவ்வப்போது மிகவும் சாதுரியமாகவும் நாசுக்காகவும் பயன்படுத்திக் கொள்கின்றனர். இந் நாட்டில் இனப்பிரச்சினை என்ற ஒன்று இல்லை என்பது அவர்களது நிலைப்பாடாகும். அவ்வாறு ஒன்று இல்லாத அதே வேளை சில பிரச்சினைகள் இருப்பின் அவை சோஷலிசத்தின் கீழ் சமத்துவமாகத் தீர்த்துக் கொள்ளப்படும் எனவும் கூறுகின்றனர். இனப்பிரச்சினையை இருப்பதாக அவர்கள் ஏற்றுக் கொள்ளாததன் அடிப்படை அதிகாரப் பரவலாக்கத்தை நிராகரிப்பதற்கேயாகும்.

தமிழர்களை ஒரு தேசிய இனமாகவோ அன்றி வடக்கு கிழக்கை அவர்களது பாரம் பரிய பிரதேசங்களாகவோ ஜே.வி.பி. ஏற்றுக் கொள்ளவில்லை. இனப் பிரச்சினைக்கான எத்தகைய தீர்வும் நாட்டைத் துண்டாடும் ஒரு தீர்வாகவே இருக்கும் என்பதை ஓங்கி அடித்துக் கூறி வருகின்றனர். அதேவேளை இடையிடையே சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களது ஐக்கியம் பற்றி உரத்துக் கூவியும் கொள்கிறார்கள். இனப்பிரச்சினை இருப்பது பற்றிப் பேசுவது இனவாதமாகவே அவர்களால் காட்டப்படுகின்றது.

ஏற்கனவே நடைமுறைக்கு வராது கைவிடப்பட்ட தீர்வுப் பொதியை நாட்டைத் துண்டாடும் மரணப் பொறி எனக் கூறி சிங்கள மக்கள் மத்தியில் பிரச்சார இயக்கத்தை நடாத்தியவர்கள் இதே' ஜே.வி.பியினர். அது அவர்களுக்கு தேர்தலில் வாக்கு வங்கியைப் பெருப்பித்துக் கொள்ள நல்ல மூலதனமாக்கிக் கொண்டது.

தாங்கள் பின்பற்றி வந்த இனவாத செயற்பாடுகள் தகுந்த பலன்களை வழங்கி வந்தது கண்டு மகிழ்ச்சியடைந்த ஜே.வி.பி யின் தலைமை தேர்தல் நெருங்கி வந்த நாட்களில் மகா சங்கத் தலைவர்களிடம் சென்று அவர்களது காலடியில் வீழ்ந்து வணங்கி ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டதை படம் பிடித்து பிரசாரம் செய்து கொண்டமை தற்செயலான ஒரு காரியம் அல்ல.

ஒடுக்கும் பேரினவாயைதையும் ஒடுக்கப்படும் தமிழ்த் தேசிய இனத்தின் ஜனாநாயகக் கோரிக்கையும் சமப்படுத்தி வசதிக்கு ஏற்றால் போன்று "இனவாதம் வேண்டாம்" என்று சுவர்களில் கோஷங்கள் எழுதி தமது உள்ளுறைந்து காணப்படும் சிகப்பு இனவாதத்தை மறைக்க ஜே.வி.பி.யினர் முற்படுவது வேடிக்கை தான். பண்டாரவளை பிந்துனுவெவப் படுகொலைகளை ஏதோ ஒப்புக்கு கண்டித்து விசாரணை செய்ய வேண்டும் எனக் கூறிக் கொண்ட அதே வேளை மலையகத்தில் ராணுவ முகாம்கள் அமைக்க வேண்டும் என்று சிங்கள மக்கள் விரும்புகிறார்கள் என அழுத்திக் கூறுவதின் ஊடாக ஜே.வி.பி. தனது இனவாத உள்ளக் கிடக்கையைக் கொட்டி நிற்கிறது.

இவற்றுக்கு மேலாக தற்போது நோர்வேயின் சமாதான முயற்சிக்கான மத்தியஸ்த நிலைப்பாட்டை மிகவும் கொடூரமாக எதிர்த்து நிற்பதுடன் ஏகாதிபத்தியச் சதி எனவும் இடதுசாரிக் கோஷம் கொண்டு தாக்குகிறது. உள் நாட்டில் ஒரு தீர்வுப் பொதி மூலமான பேச்சு வார்த்தை முயற்சியை ஜே.வி.பி எதிர்க்கிறது. அதேவேளை மூன்றாம் தரப்பு மத்தியஸ்த முயற்சியையும் எதிர்க்கிறது. புலிகளை நாட்டைப் பிரிக்கும் துரோகிகள் என்கிறது. அரசாங்கம் ஆதாயம் பெற நிற்கிறது எனக் குற்றம் சாட்டுகின்றது. அதிகாரப் பரவலாக்கம் வேண்டாம் அது மரணப் பொறி என வர்ணித்து நிராகரிக்கின்றது.

அப்படியானால் ஜே.வி.பி யின் நிலை கொடிய யுத்தத்தை தொடர வேண்டும். தமிழ் மக்களின் ஜனநாயகக் கோரிக்கைகளை அழித்தொழித்து அவர்களை இன அடிமைகளாக நடாத்த வேண்டும். அதே வேளை தாங்கள் சோஷலிசத்தின் பெயரால் ஆட்சியைப் பிடிக்க வேண்டும். என்னே. இடசாரித்தனம். என்னே. சோஷலிசம் பாதை.

முன்பு இந்திய - இலங்கை ஒப்பந்த காலத்தில் இந்திய விஸ்தரிப்பு பற்றி நீட்டி வாசித்து சண்ட மாருதம் கிளப்பி நின்றவர்கள் இப்போது நோர்வேயின் முயற்சிக்கு வீதியில் இறங்கி நிற்கின்றனர். அதே வேளை இந்தியத் தலையீடு பற்றி மௌனம் சாதிப்பது அரசியல் வட்டாரங்களில் பலத்த சந்தேகங்களைக் கிளப்பி உள்ளது.

**- நமன் -**

நன்றி - நூலகத்திட்டம்



# சமாதான வழியும் அலெண்டேவின் அனுபவமும்

1970 ஆம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்டு சல்வடோர் அலெண்டே சிலி நாட்டின் கம்யூனிஸ்ட் ஜனாதிபதியானார்.

நாட்டின் இயற்கை வளங்கள் சுரங்கங்கள் தொழிற்சாலைகள் என்பவற்றை தேசியமயமாக்கினார். அமெரிக்க மற்றும் பன்னாட்டு கம்பெனிகள் நாட்டைவிட்டு வெளியேற்றப் பட்டன. தொழிற்சாலைகள் தொழிலாளர்களிடம் ஒப்படைக்கப் பட்டன. தீவிர நிலச்சீர்ததிருத்தம் மேற்கொள்ளப்பட்டது.


சோவியத் யூனியனைப் போலவோ சீனாவைப் போலவோ கியூபாவைப் போலவோ அன்றி சிலி நாட்டில் ஆயுதம் ஏந்தாமல் அமைதியான வழியில் சோஷலிசத்தை கட்டமுடியுமென்று கனவு கண்டார் அலெண்டே. தொடர்ந்து பல முறை தேர்தலில் போட்டியிட்டு 1970 இலில் வெற்றி பெற்றார். பதவியேற்றபிறகு அவரது சோஷலிஸ அரசாங்கத்திற்கு ஏற்ப ஆயுதப்படையையோ அரசு யந்திரத்தையோ அவர் மாற்றியமைக்கவில்லை.

அமெரிக்க உளவுப் படையான சி.ஐ.ஏ. யின் சூழ்ச்சியால் பல முறை குறிவைத்து தாக்கப்பட்டார். சோடியம் நைட்டிரேட்டும் செம்பும் பாளம் பாளமாக கிடைக்கும் சிலி தேசத்தை அப்படி விட்டுவிட அமெரிக்க ஏகாதிபத்தியம் சம்மதிக்கவில்லை. சி.ஐ.ஏ.யின் சூழ்ச்சியால் சிலியின் இராணுவம் பிளவுபட்டது.

மக்களை இராணுவ மயமாக்க வேண்டும் என்றும், ஆயுதப்படையை மாற்றி அமைக்க வேண்டுமென்றும் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை அலெண்டே நிராகரித்தார். அமைதியான வழியில் ஆட்சி தொடர முடியும் என்று நம்பினார். சிலி இராணுவத்தின் தேசபற்றை நம்பினார். ஆனால் 1973 ஆம் ஆண்டு செப்டெம்பர் 1ம் நாள் இராணுவம் அலெண்டேயைக் கொன்று மீண்டும் எதிர்ப்புரட்சிகர ஆட்சியை சிலியில் ஏற்படுத்தியது.

அன்றைய தினம் 'லா மொனெடா' என்ற சிலியின் ஜனாதிபதி மாளிகையை டாங்கி படைகள் சுற்றி வளைத்தன. அலெண்டே தன் பதவியைத் துறந்து விட்டு சரணடைய வேண்டும். அவருக்கான தனி விமானம் தயாராக உள்ளது. அவர் விரும்புகிற ஏதேனும் ஒரு லத்தீன் அமெரிக்க நாட்டிற்கு தப்பிச் செல்லலாம் என இராணுவம் அவருக்கு நேரக்கெடு விதித்தது.

துரோகிகளின் தாக்குதலிலிருந்து நம் தேசத்தின் ஜீவநாடியான தொழிற்சாலைகளையும் வயல் வெளிகளையும் காத்து நில்லுங்கள் என அலெண்டே வானொலியில் மக்களுக்கு அறைகூவல் விடுத்தார். இந்நாட்டின் அரசியலமைப்பு சட்டப்படி



பெருவாரியான மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதிக்கு உங்களைப் போன்ற துரோகிகள் உத்தரவிடமுடியாது. என்னை 'லாமொனெடா' விற்குள் (ஜனாதிபதி மாளிகைக்குள்) அனுப்பியது என் மக்கள். இறுதிவரை மக்களின் உத்தரவை நிறைவேற்றுவேன். மாளிகையை விட்டு வெளியேற மாட்டேன் என அலண்டே தன்னை சுற்றி வளைத்திருந்த இராணுவத்தினரை நோக்கி தெரிவித்தார்.

உடனடியாக ஜனாதிபதி மாளிகையில் இருந்த பெண் ஊழியர்களையும், ஆயுதப்பயிற்சியில்லாதவர்களையும் தப்பிச் செல்ல உத்தரவிட்டார். ஆலண்டே. ஆனால் எவரும் வெளியேறச் சம்மதிக்கவில்லை. இறுதிவரை அவரோடு நிற்கவே விரும்பினர். விவாதிக்க நேரமில்லை எதிர்த்தாக்குதலுக்கான உத்தரவுகளை பிறப்பித்தப்படி அவரும் தயாரானார். தலையில் ஹெல்மட் அணிந்து கொண்டு தன் அறையில் பத்திரமாக வைத்திருந்த இயந்திரத்துப்பாக்கியை கையில் எடுத்தார். முகத்தில் வலியும் பெருமிதமும் கலந்த ஒரு புன்னகையுடன் அதனை முத்தமிட்டார்.

தெருவில் நின்ற டாங்கிப் படைகள் முன்னேற முடியவில்லை. மாளிகைக் குள்ளிருந்த எரிமலை பீறிட்டது. டாங்கிகள் பின்வாங்கின. பின் கூடுதல் படைகளுடன் துரோகிகள் தாக்குதல் தொடர்ந்தது. காலை 8 மணிக்கு தாக்குதலை தொடங்கிய எதிரிகள் பகல் 2 மணிக்குத்தான் மாளிகை வளாகத்திற்குள் நுழையமுடிந்தது.

மாளிகையில் எஞ்சியிருந்த பெண்களுக்கு அலெண்டே அவசரமாக விடைகொடுத்தார். அலெண்டேயின் புத்திரிகளான பீட்டரிஜ், இஸபெல்லா ஆகிய இருவரும் வெளியேற மறுத்து கதறி அழுதனர். அவர்களை அருகே அழைத்து அன்புடன் முத்தமிட்டு கையசைத்து போகச் சொல்கிறார். ஒரு வார்த்தை பேசவும் அவகாசம் இல்லை.

மீண்டும் துப்பாக்கிகளின் உறுமல். மாளிகையின் ஒவ்வொரு அடிப்பரப்பையும் தேசப் பக்த வீரர்களின் பிணங்களின் மீது நடந்துதான் கைப்பற்ற முடிந்தது. சரமாரியான குண்டுகளால் துளைக்கப்பட்டு கீழே விழும்வரை அலெண்டே துப்பாக்கியை கைவிடவில்லை.

அலைண்டே கியூபாவிற்கு சென்றிருந்த போது சேகுவேராவும் ஃபிடல் காஸ்ரோவும் பரிசுகளை வழங்கினர். சே குவேரா தன்னுடைய புத்தகம் ஒன்றை பரிசாகக் கொடுத்தார். அதன் முதல் பக்கத்தில் "எம்முடைய அதே சோஷலிஸ லட்சியங்களை அடைய மாற்றுவழிகளைத் தேடும் சல்வடோர் அலைண்டேவிற்கு வாழ்த்துக்களுடன் சே" என்று எழுதி கொடுத்திருந்தார். பிடல்காஸ்ரோ ஓர் இயந்திரத் துப்பாக்கியை வழங்கியிருந்தார். அந்த இயந்திரத்துப்பாக்கியையே அலெண்டே அவரது இறுதிப் போராட்டத்தில் பிரயோகித்தார்.

இத்துடன் அலெண்டேயின் கடைசி நிமிட வார்த்தைகளையும் சேர்த்து வாசிப்பது பயனுள்ளதாகும். "நான் வெறுமனே ஒரு காரியமுமற்றுச் சாகவில்லை. ஏகாதிபதியத்தின் எல்லா வித கபடங்களுக்கும் சதிகளுக்கும் சாட்சியாக என் மரணம் நிற்கும்' என்பதே அந்த வார்த்தைகள்.

*மூலம் : புதுவிசை*
*கலாச்சார காலாண்டிதழ்*

# பரிசும் பரிசுகேடும்

## நோபல் பரிசின் பின்னால்

பட்டம், பதவி மோகம் போல பரிசுகள் மீதும் படித்த நடுத்தர வர்க்கத்தினரிடையே மோகம் அதிகம். பரிசுகள் எல்லாமே தகுதி கண்டு தரப்படுகிறதில்லை. பரிசுகளுக்கும் விருதுகளுக்குமாக யார் கையிலாவது எதையாவது வைத்தோ யார் காலிலாவது எங்கேயாவது விழுந்தோ பரிசும், விருதும் வாங்குவதும் அதைப் பற்றி விளம்பரம் செய்வதும் சிலருக்கு ஒரு வியாதியாகவே ஆகிவிட்டது. இதன் விளைவு என்ன? பரிவாரலோ பரஸ்பர முதுகு சொறிதலுக்காகவோ ஒருவருக்குப் பரிசு வழங்கப்பட்டால் அது அந்தப் பரிசுக்குச் செய்யப்பட்ட அவமரியாதை. அது அந்தப் பரிசைப் பெற்ற எல்லோரின் தகுதியையும் குறைவாகக் காட்டும் என்பதால் அது அவர்களையும் அவமதிப்பதாகும்.

உதாரணமாக, கள்ள வாக்குகள் மூலமும் ஊழல், லஞ்சம் போன்ற மோசடிகள் மூலமும் ஒருவர் பாராளுமன்றப் பதவி பெறும் போது தேர்தலில் வேறு எவரும் பெறும் பெரும்பான்மைப் பலமும் வெற்றியும் கூட சந்தேகத்துக்கு இடமாகிறது. ஆனாலும் மாகாணசபை உறுப்பினர் போன்ற அதிகாரமே இல்லாத பதவிக்கு அலைகிறவர்கள் முதற்கொண்டு பாராளுமன்ற நாற்காலிகட்கு அலைகிறவர்கள் வரை நிறையப் பேர் உள்ளனர். பதவி மோகத்துக்கும் பரிசு மோகத்துக்கும் உள்ள ஒற்றுமைகள் பல. எனவேதான் எத்தகைய மோசடி மூலம் பெறப்பட்ட பதவியானாலும் பரிசானாலும் அதை வைத்து மற்றவர்களை மருளவும் மிரளவும் செய்ய முடிகிறது.

பரிசு ஒன்றின் தகுதி அதை வழங்குகிறவர்களிலேயே தங்கியுள்ளது. பரிசுகள் பெறுகிறவர்கள் எந்த அடிப்படையில் அதைப் பெறுகிறார்கள் என்பதை நாம் பெரும்பாலும் அறிவதில்லை. பிரபலமான பரிசுகள் நடுநிலையானவர்களாலேயே முடிவு செய்யப் படுகின்றன என நாம் நம்புகிறோம். முக்கியமாக அயல் நாடுகளில் வழங்கப்படும் பரிசுகள் பற்றிய நமது மயக்கங்கள் அதிகம். மேலை நாடுகளில் வழங்கப்படும் பரிசுகள் பற்றி நமக்குள்ள மயக்கங்கள் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. என்றாலும், பரிசுகள் எவரெவருக்குக் கிட்டுகின்றன என்பதும் எவரெவருக்குக் கிட்டியதில்லை என்பதையும் கவனித்தால் சில உண்மைகள் விளங்கலாம்.

நம் எல்லாருக்கும் பெரிதாகத் தெரிகிற பரிசுகளில் ஒன்று நோபல் பரிசு. இதன் நடு நிலைமை பற்றிய மயக்கங்கள் மேலை நாட்டுத் தகவல் ஊடகங்கள் மூலம் ஊக்குவிக்கப்படுகின்றன. நமது செய்தி ஏடுகளும் சஞ்சிகைகளும் இதுபற்றி அதிகம் கவலைப்படுவதில்லை. நோபல் பரிசுகளில் அப்பட்டமான அரசியல் தலையீடு கொண்டது சமாதானப் பரிசு. நோபல் பரிசின் நம்பகத்தை வலியுறுத்துகிற விதமாக ஒரு சில பரிசுகள் வழங்கப்டும் போது கூட ஏகாதிபத்திய அரசியலுக்கு வசதியாகப் பணியாற்றியவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டதை நாங்கள் காணலாம். உதாரணமாக நெல்சன் மண்டேலாவும் நிறவாத அரசியலின் இறுதிப் பிரமுகராக இருந்த டிக்ளோர்க்கும் பரிசைப் பங்கிட்டதைக் கூறலாம். இவ்வாறே வடஅயர்லாந்தின் புரட்டஸ்தாந்து மதவாதச் சக்திகளின் பிரதிநிதிக்கும் ஸியோனிஸத்தின் பிரதிநிதியான ஷிமொன்பெரெஸ் போன்றவர்கட்கும் சமாதானப் பரிசு பங்கிடப்பட்டதை நாம் அறிவோம். தாய்லாமாவுக்கு ஏன் பரிசு வழங்கப்பட்டது என்பது பற்றி நாங்கள் அதிகம் ஆராய அவசியமில்லை.

சமாதானப் பரிசின் லட்சணம் அப்படியென்றால் இலக்கியப் பரிசின் அரசியல் அதை விடச் சிறந்ததல்ல. இலக்கியப் பரிசுக்கான தகுதிக்கு ஆங்கிலத்தில் மொழிமாற்றப் படுவது ஒரு அவசிய நிபந்தனையாவதால் , மூன்றாமுலகப் படைப்புக்கள் பல எளிதாகவே ஓரங்கட்டப்பட்டது.

அது போக வெகுசன விடுதலைக்கான போராட்ட இலக்கியங்கள் எதுவுமே நோபல் இலக்கியப்பரிசு பெற்றதாக வரலாறு கிடையாது. 19ம் நூற்றாண்டின் முடிவிலும் 20ம் நூற்றாண்டின் முற் பகுதியிலும் ரஷ்ய இலக்கியம் பல சிறந்த படைப்பாளிகளை அடையாளங்காட்டியது. ஆனாலும் பரிசு வழங்கப் பட்டவர்கள் யார்? ரஷ்ய புரட்சிக்கு மாசுகற்பிக்க வசதியை வழங்கியதாலயே போரிஸ் பாஸ்ற்றர்னாக் தனது டொக்டர் ஷிவாகோவுக்கா இலக்கியப் பரிசைப் பெற்றார். அலெக்சாண்டர் சொல்ற்ஸினெற்சினின் சோஷலிஸ விரோதம் உலகப் பிரச்சித்தமானது.

ரஷ்யாவின் மக்ஸிம் கோர்க்கி அன்றறன் செகவ் சீனாவின் லுஷுன் இந்தியாவின் பாரதி போன்றோர் பரிசுபெறாத பெருமைக்கு உரியவர்களில் சிலர். எகாதிபத்திய விரோத, ஆதிக்க விரோதப் படைப்பாளிகள் சிலர் பரிசு பெறாமலில்லை. நைஜீரியாவின் வொலே ஸொயின்கா போல உதாரணங்கள் உள்ளன. ஆனால் இவை பொதுவாகக் கண்துடைப்புக்களே.

விஞ்ஞானப் பரிசுகளைப் பொறுத்தவரை, மேலைநாட்டு விஞ்ஞானத்தின் சமூகப் பார்வையே விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களின் முக்கியத்தைத் தீர்மானிக்கின்றன. அதைவிட தேசியவாத அரசியலும் அங்கு முக்கியமான பங்கு வகித்து வந்துள்ளது. இரண்டு ஆண்டுகள் முன் அமர்த்தயா சென் பெற்ற பொருளியல் பரிசு அதன் சமூக சீர்திருத்தவாதக் கண்ணோட்டத்தினை மீறிப் பெறப்பட்ட ஒன்று எனலாம். ஆயினும் மற்றைய பொருளியல் துறைப் பரிசுகளை நோக்கினால், முதலாளிய, ஏகாதிபத்திய நலன்களை அப்பட்டமாகப் பேணியோரே பரிசு பெற்றதை நாம் காணலாம். அமார்த்தியா சென் பெற்ற அங்கீகாரம் நோபல் பரிசுக்கு ஒரு அலங்காரமாகவே வழங்கப்பட்து. ஒரு இந்தியர் பரிசு பெற்றது பற்றிய பல இந்தியர்கள் பெருமைப்பட்டனர். ஆசியர், கறுப்பர் என்றும் பெருமை பேசப்பட்டது. ஆனால், ஒரு ஆசியருக்குப் பரிசு வழங்கி நோபல் பரிசின் பரிசுகேடுகள் மூடி மறைக்கப்பட்டு விட்டன. அது போக அமார்த்யா சென் முன்வைக்கும் சீர்திருத்தக் கருத்துக்கள் இன்றைய உலகின் கொடுமையான சர்வதேசப் பொருளாதார அமைப்பைத் தூக்கி எறிவது பற்றியவை அல்ல. அத்தகைய சிந்தனையாளர்கட்கு நோபல் பரிசு கிடைக்கப் போவதும் இல்லை.

ஒரு படைப்பின் பெறுமதியும் முக்கியமும் பரிசுகளால் அளக்க முடியாதவை. ஒவ்வொன்றையும் அதனதன் சமூகப் பயன்பாட்டை வைத்தும் மனித இனத்தின் உயர்வுக்கும் உய்வுக்கும் அதன் பங்களிப்பின் அளவை வைத்துமே நாம் மதிப்பிடுவது பொருந்தும். புகழ் மிக்கன எல்லாமே தரம் மிக்கவை அல்ல என்பதை நாம் மனதில் வைத்திருப்போமானால் சக மனிதர்கட்குப் பயன் மிக்க காரியங்களைச் செய்வதில் நாம் வெற்றி காணுவோம்.

*ஜனார்த்தனன்*

6ம் பக்கம்

## பொதுத் தேர்தல்

அரசியல் மூடமான நிலைக்கும் கோமா நோயாளி போன்ற அரசியல் விழிப்பற்ற சூழலுக்குள்ளும் அமுக்கப்பட்டனர். இந்த நிலையை அரசியல் ரீதியில் உடைத்து அதிலிருந்த மக்களை விடுவித்து விழிப்படையச் செய்வதற்கு இத் தேர்தலைக் கட்சி பயன்படுத்த வேண்டும் எனத்தீர்மானித்தது.

இப் பொதுத் தேர்தலில் கட்சிக்கு ஒரு இலகுவான வழி இருந்தது. அதாவது இத் தேர்தலை பகிஷ்கரித்துக் கொள்வது என ஒரே ஒரு அறிக்கை விட்டுவிட்டு பேசாமல் ஒதுங்கி இருந்து கொண்டிருக்கலாம். ஆனால் குடாநாட்டில் கட்சி தொடர்ந்தும் மக்கள் மத்தியில் தனது வேலைகளை முன்னெடுத்து வருவதால் தேர்தலில் பங்குபற்றி மக்களுக்கு எமது அரசியல் கோரிக்கைகளையும் அவற்றை வென்றெடுக்கும் மார்க்கத்தையும் எடுத்து விளக்க வேண்டிய தேவையை இத் தேர்தல் வேலைகளின் ஊடாக முன் னெடுக்க முடிந்தது. எமக்கு பகிஷ்கரிப்பின் முன் அனுபவங்கள் போதியளவு உண்டு. அதனை எப்போது எப்படி எச்சந்தர்ப்பத்தில் செய்ய வேண்டும் என்பதை நன்கு ஆராய்ந்த பின்பே குடாநாட்டுத் தேர்தலில் கட்சி பங்கு கொண்டது.

அங்கு அரசின் பலம், பணபலம், அதிகார பலம், துப்பாக்கிகளின் அச்சுறுத்தல் போன்ற வற்றின் மத்தியில் தேர்தல் வேலைகளில் கட்சி இறங்கியது. குறுகிய கால இடைவெளியிலும் பணபலம் அற்ற சூழலிலும், தேர்தல் முன் அனுபவமற்ற நிலையிலும், முற்றிலும் யுத்த மயமாக்கப்பட்ட சூழலிலும் கட்சியின் தேர்தல் வேலைகளை கட்சித் தோழர்கள் மிகுந்த சிரமங்களுடனும் அரசியல் ஸ்தாபன அர்ப்பணிப்பு உணர்வுகளுடனும் முன்னெடுத்துச் சென்றனர். மக்கள் தம்மால் இயன்ற ஆதரவையும் உதவிகளையும் செய்தனர். எந்த மக்களிடம் தனது கொள்கை கோட்பாடு வேலைத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டுமோ அந்த மக்களிடம் கட்சி சென்று வேலைகளை முன்னெடுத்துக் கொண்டது. அதன் அனுபங்கள் மிகப் பெறுமதியானவையாகும். எமது எதிர்கால வேலைகளை முன்னெடுப்பதற்கு பல பாடங்களைப் படிக்க இத் தேர்தல் கால வேலைகள் எமக்கு உதவிக் கொண்டமை முக்கியமானவையாகும்.

குடாநாட்டில் இதுவ்ரை இடம் பெற்ற தேர்தல்கள் எதிலும் கட்சி நேரடியாகப் பங்கு கொண்டு வேலை செய்ததில்லை. இதுவே முதல் தடவையானதாகும். வெற்றி என்பதை விட எமது அரசியல் கோரிக்கைக்கான பரந்த பிரசாரமும் கிடைத்த கணிசமாக வாக்குகளும் கட்சிக்கு ஒரு அங்கீகாரத்தை பெற்றுக் கொடுத்துள்ளது. மக்கள் மத்தியில் தொடர்ந்தும் எமது அரசியல் வேலைகளை முன்னெடுப்பதற்கான ஆத்ம பலத்தை எமது தோழர்களுக்கு இத் தேர்தல்கால வேலைகள் யுத்த சூழலிலும் வழங்கியுள்ளமை முக்கியமானதாகும்.

நன்றி - நூலகத்திட்டம்



# பாரதி திரைப்படம் - ஒரு நோக்கு

— சோ. தேவராஜா —

'இந்தியாவில் பிறக்கும் ஒவ்வொரு மனிதனும் வாயுடனும் வயிற்றுடனும் பிறக்கிறான்' என்பது நேருவின் கூற்று எனச் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் பிறக்கின்ற ஒவ்வொரு மனிதரும் ஒரு மூளையுடனும் இரு கைகளுடனும் பிறக்கின்றனர் என்பது ஒரு பொதுவுடமை வாதியின் நிலைப்பாடு.

"தேடிச் சோறு நிதம் தின்று, பல சின்னஞ்சிறு கதைகள் பேசிப் பிறர் வாடப் பல செயல்கள் செய்து நரை கூடிக் கிழப்பருவம் எய்தி கொடுங் கூற்றுக்கிரை யெனப்பின் மாயும் வேடிக்கை மனிதரைப் போலே வீழ் வேன் என நினைத்தாயோ' எனப்பாடிய மகாகவி பாரதியை குடும்பம் என்னும் கூட்டுக்குள் சிறைப்படுத்த முயன்றிருக்கிறார் இயக்குனர் ஞான சேகரன்.

குடும்பம் என்பது சமுதாயத்தின் அலகாகக் கணிக்கப்படுவது மறுப்பதற்கில்லை. எனினும் குடும்பமே குவலயம் ஆகிவிடமுடியாது 'ஆகா என்றெழுந்தது பார் யுகப்புரட்சி, கலி வீழ்ந்தான்' என்ற பாரதியின் மகிழ்ச்சியின் ஊற்று மூலத்தை கண்டறிய மறுப்பினும் பாரதிக்கும் செல்லம்மாவுக்குமிடையிலான உறவை விவாகரத்து வழக்குக்குகான ஓர் முன்னெடுப்பான பகை முரண்பாடாகக் காட்டி நீதி மன்றத்தில் புதிய வழக்கொன்றை தொடுக்க முனைந்திருக்கிறார் இந்த இயக்குனர்.

புராண நாயகர்களான இந்துத் தெய்வங்களை எழுத்தாளன் தனது கருத்துக்கேற்ப கற்பனையாக கதை பண்ணலாம். காட்சிப்படுத்தலாம். வரலாற்றுக்கும் அதற்கும் சம்பந்தமில்லை. ஆனால் 'பாரதி' என்ற வரலாற்றுப் பாத்தரத்தை அவன் வாழ்ந்த காலசமுதாயப் பின்புலத்திலிருந்து பிரித்து தூக்கியெடுத்து தனிமைப் படுத்தி சமகால கணவன்-மனைவியர்க்கிடையிலான உறவின் விரிசலை வெளிப்படுத்தும் பூகோளமயமாதலின் ஒற்றைப் பரிமாணத்தின் போக்கில் நோக்குவதுதான் அபத்தமாகவுள்ளது.

காந்தியின் கதையையோ கண்ணதாசனின் கவிதையையோ படமாக்குவதில் அதிக பிரச்சினையில்லை. ஏனெனில் அவர்களுடைய சுயசரிதை நூல்கள் உள்ளன. மாறாக பாரதியின் படத்தை ஆக்குவதெனில் அதனை ஆவணப்படமாக எடுக்காது விடினும் கதைப்படமாக எடுக்க முனையும் போது கூட கூறப்படும் சம்பவங்களின் நம்பகத் தன்மை கவனிக்கப் படவேண்டும். பாரதி நூற்றாண்டை யொட்டி பல ஆய்வு முயற்சிகள் நடந்துள்ளன. அவற்றில் தோய்ந்திருப்பின் மட்டுமே முத்தெடுக்க முடியும்.

பாரதியைப் புரிந்து கொள்வதெனில் அவரது கவிதை மட்டும் போதாது. பத்திரிகைக் கட்டுரைகள் மிகமுக்கியமானவை. அதுவும் கதைப் படமெனில் அவருடன் தொடர்புடைய பிற நண்பர்கள் எழுதிய நூல்களுடன் பரிச்சயம் இருந்திருக்க வேண்டும்.

தமிழ் கவிஞன்தானே எப்படியும் எடுத்துவிடலாம் என்ற ஏனோ தானோ என்ற மனப்பாங்கு தமிழ்ச்சினிமாவின் சாகித்தியங்களை யோசிக்கும் பொழுது பிரச்சினையில்லைத்தான் ! தமிழ் கல்வியோ, போதனா மொழி தமிழ்க் என்பதோ தமிழ் நாட்டில் அவலப்படும் சூழலில் இத்தகைய சீரிய சிந்தனை அவசியமில்லைத்தான். எனினும் சோரச் சிந்தனையின் வெளிப்பாடாக பாரதி என்ற பாத்திரத்தை கருவிலே திருவுடையாராக பிராமணியச் சிந்தனையைத் தெளித்து திருஷ்டி கழிக்க முனைவதுதான் சகிப்பதற்குச் சற்றுச் சிரமமானது.

"பார்ப்பானை ஐய்யரென்ற காலமும் போச்சே, வெள்ளைப் பறங்கியைத் துரையென்ற காலமும் போச்சே" என நிலமானிய சாதிய அகம்பாவச் சிந்தனைக்கெதிரான தனது தேசியவிடுதலையில் ஏகாதிபத்திய எதிர்ப்பாளராகவும் ஒரே சமயத்தில் விளங்கியவர் பாரதி.



படத்தின் ஆரம்பத்தில் காசியில் பாரதி மீசை விட்டு, தலைப்பாகை கட்டி, பூனூல் கழட்டி எறிவதுடன் கோட்டுப் போடும் காட்சிகள் வருகின்றன. அப்போது பாரதி தாழ்த்தப்பட்டவர்களை ஒதுக்கும் பார்ப்பனர்களுக்கு எதிரான தனது கோபத்தைக் காட்டவே இந்த வேஷம் என்று கூறுவதாக காட்சி அமைகிறது. அதே பாரதி படத்தின் இறுதியில் தனது மகளின் திருமணத்துக்காக அக்கரகாத்து பாரப்பனிய சமூகத்தின் வெறுப்பிலிருந்து ஒதுங்குவதற்காக விட்டு விடுதலையாய் பூணூலை தரித்துக் காட்சியளிப்பதும் அப்பட்டமான சமரசமாய் அமைந்துவிடுகிறது. இக்காட்சிச் சித்தரிப்பின் மூலம் பாரதியின் சொல்லும் செயலும் வேறுபட்டனவாய் அமைவதாக படம் காட்டுகிறது. இது ஆதாரமற்ற ஓர் சம்பவகோவையாகும். பாரதியின் ஆளுமையைக் கொச்சைப் படுத்தி விடுகிறது.

பாரதி 'இந்தியா' பத்திரிகை நின்று போனபின்னர் குடும்ப அளவில் ஏற்பட்ட வறுமையில் பாரதியும் செல்லம்மாவும் பங்களிப்பதற்குப் பதிலாக குடும்பப் பொறுப்பற்ற போக்கிரி போலவும், இயற்கைக் காட்சியை ரசிக்கும் போது உடுதுணி ஆற்றில் செல்வதாகவும், வீட்டில் பிள்ளைகள் பட்டினி கிடக்க யாரோ மாம்பழக்காரிக்கு அவளது பட்டினி போக்க மேலதிகமாக காசு கொடுப்பதாவும் தனது மகளுக்கு முன்பின் அறிமுகமற்ற ஜவுளிக் கடைக்காரனுக்கு (ஜவுளிக்கடைகாரன் பாரதியை கௌரவித்து சமகாலத்தில் பொன்னாடை போர்க்கும் காட்சி போல் அமைந்துவிடுகிறது.) திருமணம் பேச முனைவதுமான காட்சிகளும், பாரதிபற்றிய செல்லம்மாவின் புறுபுறுப்புகளும் சமகாலத்தில் விளிம்பு நிலைமக்கள் எனக்கருதும் பைத்தியக்காரப் பாரதியின் மீது அனுதாபம் ஏற்படுத்தி அவரை அங்கீகரியுங்கள் என காலம் கடந்தேனும் காப்பாற்ற முனைவது போல் தோன்றுகிறது.

இது பின்நவீனத்துவ மகாகவி பாரதி என்ற படிமத்தின் மீது நிகழ்த்தும் குடும்பப் பாணி பாரதியின் கட்டுடைப்பாக மாறிக் கொடுமைப்படுத்துகிறது.

தமிழ் நாட்டில் சமகாலத் தலித்துக்களின் போராட்டத்தினை இந்துத்துவ பார்ப்பனிய வழிக்கு ஆற்றுப்படுத்துவது போல் பாரதி, ஒரு கனகலிங்கத்துக்குப் பதிலாக தாழ்த்தப்பட்டமக்கள் கூட்டத்தினருக்கே பூணூல் அணிவித்து வீட்டுக்குள் கொட்டமடித்துக் கூத்தாடுவதும் அதைப்பார்த்து செல்லம்மா அழுது வடிப்பதும் தாழ்த்தப்பட்டவர்களுடன் பிராமணர்களின் வீட்டுக்குள் நுழைந்து அவர்கள் அருகில் அவர்களை அமர்த்தும் அராஜகமும் இரு கைகளாலும் அணைத்தபடி பாடுவதும் எம். ஜி. ஆர். ரஜனி பாணிச் தமிழ் சினிமாவுக்கு ஒன்றும் புதியதல்லவே !

செல்லம்மாவின் துயரம் என்பது தமிழ் சினிமாவின் 'பெண் என்றால் அழுவது' என்ற படிமத்தைப் பாதுகாக்கும் வகையில் கற்புக்குக் களங்கமின்றிப் பேணப்பட்டுள்ளது. பாரதி கண்ட பெண் விடுதலைச் சிந்தணையும் செயலும் மறுதலிக்கப்பட்டு பெண்ணியச் சமகாலப்பார்வையில் செல்லம்மாவின் வில்லனாக ஆணாகிய பாரதி சித்திரிக்கப்பட்டிருப்பதில் படத்தின் கோளறு கோலம் பதியப் பட்டு விடுகிறது.

படத்தின் தொடக்க காட்சிகளில், பாரதியின் தந்தை வர்த்தகத்தில் ஈடுபட்டு தோல்விகண்டு உயிர்துறக்கும் சமயத்தில் "காலத்தை மீறிக்கனவு கண்டு ஏமாந்து போனேன். நீயும் அப்படி மோசம் போய்விடாதே" என்று கூறுவது படத்தின் இறுதியில் பாரதி கஷ்டமுறும் வேளை அசரீதியாக ஒலிக்கும்போது பாரதி அழுதே விடுகிறான். 'கனவு காணுங்கள்' என்று மாக்ஸியவாதிகள் கூறிய வாசகத்தை மறுதலிப்பதாக சமூக மாற்றக் கனவை காணும் பைத்தியக் காரத்தனத்தைக் கைவிடுங்கள் என்ற தாரகத்தை பாரதியூடாக நசிவுப்பண்பாட்டுக்கு கட்டியம் கூறிவிடுகிறது இப்பாரதி படம் எனலாம்.

ஆக, பாரதீய ஜனதா ஆட்சியில் இந்துத்துவ பார்ப்பனிய சாமானியனாக பாரதி படைக்கப்பட்டதில் எலும்பும் தசையுடன் கூடிய பாரதியின் தரிசனம் என்பது ரசிகர் நம்பிக்கை வரட்சியையும், விரக்தியையும் விதைத்த தெனிலும்; நிச்சயமாக பாரதி பற்றிய சமகால குடும்ப வாசிப்புக்கு இத்திரைப்படம் இந்துத்துவ விருதுக்கு சிபார்சு செய்யப்படும் என நாம் நம்பியிருக்கலாம்.

●

1ம் பக்க தொடர்

## அமைச்சர் ஆறுமுகம்


சம்மேளனத்துடன் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம், பெருந்தோட்ட கூட்டுத் தொழிற் சங்க நிலையம் என்பன செய்து கொண்ட உடன்படிக்கையின் பின்பு 121 ரூபா சம்பளம் உறுதி செய்யப்பட்டதாக கூறப்பட்டது. ஆனால் இன்று உண்மையில் தொழிலாளர்களுக்கு 107/- ரூபாவே சம்பளமாக கிடைக்கிறது. வேலைநாட்களில் 90 சதவீதம் வேலைக்கு சென்றிருந்தால் ஒரு நாளைக்கு 14 ரூபா ஊக்குவிப்பு பனமாக கிடைக்கும் என்பது நடைமுறையில் சாத்தியமில்லாமல் போய்விட்டது.

இதிலிருந்து விளங்கிக் கொள்ளப்பட வேண்டியது என்னவெனில் இவ்வருடம் யூன் மாதம் கையெழுத்திடப்பட்ட மேற்படி 121 சம்பள உயர்வை உறுதிசெய்வதாக காட்டப்பட்ட ஒப்பந்தம் மிகவும் கோளாறுகளை கொண்டதாகும். அவ்வொப்பந்தம் இரத்துச் செய்யப்படாமல் நாளாந்தம் 121 ரூபா சம்பள மட்டுமன்றி மாதாந்தம் 400 ரூபா சம்பள உய்வையும் பெறமுடியாது. அவ்வொப்பந்தம் எதிர்வரும் 30 யூன் 2002 வரை செல்லுபடியானதாக இருக்கும்.

அவ்வொப்பந்தத்தின்படி 121 ரூபா நாளாந்த சம்பளம் என்று கூறப்பட்டாலும் அதில் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளுக்கு இணங்க ஒரு தோட்டத்தொழிலாளிக்கு ஒரு நாளைக்கு 107 ரூபா மட்டுமே நடைமுறையில் கிடைப்பதாக இருக்கிறது. அத்துடன் அவ்வொப்பந்தம் செல்லுபடியானதாக இருக்கும் வரை வேறு எந்த சம்பள உயர்வுகளையும் பெற தோட்டத் தொழிலாளர்கள் உரிமை உடையவர்களாக இல்லை. உண்மையில் தோட்டத் தொழிலாளர்கள் மீண்டும் மீண்டும் ஏமாற்றப்படுகின்றனர். அவர்களை தோட்டகம் கம்பனிகளுக்கும் அரசாங்கத்திற்கும் காட்டி கொடுத்து அதற்குப் பிரதி உபகாரமாக பட்டம், பதவி, சொத்து, சுகம் தேடிக் கொள்ளப்படுகிறது.

ΥΥΥ

## 100 ஆண்டுகள் தமிழ் வளர்ச்சியை நோக்கி...




# இலக்கிய நீரோக்கள்

சுதர்சன் ஜவுளிநிறுவனம்; காலச்சுவடு இலக்கிய நிறுவனம் (பி.லிட்) நாகர் கோவில்; ஆர் எம். கே. வி பட்டு நிறுவனம், திருநெல்வேலி; சரி நிகர் பத்திரிகை - மெர்ஜ் தன்னார்வ நிறுவனம் - கொழும்பு; ஸ்ரீராம் சிட் பைனான்ஸ் - சென்னை; ஆன் லைன் - ஆறாம் திணை இணைய நிறுவனம் சென்னை ஆகிய ஜவுளி இலக்கிய பைனான்ஸ் இன்டர் நெட் தன்னார்வக் கம்பெனிகள் பண வலிமையுடனும் இலக்கியப் பெருமையுடனும் கலந்தளித்த அந்தக் கருத்தரங்கம் - தமிழ் இனி 2000.

பாரதியின் வத்தற்குழம்புச் சுவையும், சுஜாதாவின் உருளை சிப்ஸ் ருசியும் கருத்தரங்குத் தலைப்பிலிருக்கிறது என்றால் நடைபெற்ற இடத்திலோ அமெரிக்காவே இருக்கிறது. சென்ற ஒலிம்பிக் போட்டி நடந்தது அமெரிக்காவின் அட்லாண்டா நகரத்தில் . தமிழ் இனி பேசப்பட்டதோ அட்லான்டிக் ஓட்டலில். நட்சத்திர விடுதிகள், விமானக் கம்பெனி அலுவலகங்கள், கன்னிமாரா நூலகம், கட்டப்படும் மேம்பாலம், பிஸ்ஸா கார்னர்கள், பெட்டிக்கடை ஓவன் சாண்ட்விச்சுக்கள், யூஸ் அண்டுத்ரோகுவளைகள், அவ்வப்போது வந்து போகும் 40 லட்ச பென்ஸ் கார்கள், கோட்சூட் நிர்வாகிகள், குட்டைப் பாவாடை அழகிகள் என ஏறக்குறைய அமெரிக்கச் சூழ்நிலைதான். பேர் அண்ட் லவ்லி ·பூசப்பட்ட இட மென்றால் பெருங்காய டப்பா மணம் வீசாமலில்லை.

சொல்பொருள் நிகழ்வுகளைக் கேட்க வந்த பருப்பொருள் பார்வையாளர்கள் ஈழ, இந்திய இன்னபிற தமிழ் மனிதர்களைப் பார்க்கும் போது, இலக்கியம் செழுமையாக இருப்பது புரிந்தது. வேளைக்கொரு உடை, பட்டு, பொன், பொட்டு, விலை உயர்கேமராக்கள், மினரல் வாட்டர் கேன்கள், கசக்கப்படும் பிளாஸ்டிக்குவளைகள், மொத்தத்தில் தோல்களில் சாராசரி நிறம் வெள்ளைதான், கருப்போ, மாநிறமோ அல்ல. பாரதி, புதுமைப்பித்தனை விட இன்றைய இலக்கிய வாழ்க்கை பல மடங்கு கலர்.·.புல்லாக, ரிச்சாகத்தான் இருக்கிறது. கூட்டினால் வரும் 400 தலைகளுக்கான இந்நிகழ்ச்சியின் பட்ஜட் 40 லட்சத்தைத் தாண்டும் என்கிறாகள். சரி யான கணக்கு வேண்டுவோர் அவர்களின் இணையத் தளத்தைப் பார்க்கலாம். கருத்தரங்கங்களின் பளபளப்பைப் பணக்காரக் கட்சியான காங்கிரசின் கூட்டத்தில் கூடப் பார்க்க முடியாது.

**ரூபா 40 லட்சம் செலவில் நடாத்தப்பட்ட 'தமிழ் இனி 2000' மாநாட்டை புதிய கலாச்சாரம் சாடுகிறது.**

முதல் கூட்டத்தில் 400 பேர்களாக இருந்த தலைகள் பின்னர் 100,50 ஆகச் சிறுத்துப் போனது. மேடையில் 'விட்டு விடுதலையாகி நிற்பாய்' என்ற பாரதியின் வரிகள் வெளியேறிய தலைகளுக்குப் பொருத்தமாய்ப் பளீரென மின்னியது. உள்ளே இருந்தவர்களும் மேடைப் பேச்சிலிருந்து விட்டு விடுதலையாகி தங்களுக்குள்ளேயே கதைத்துக் கொண்டார்கள். கணிசமான காசு ஈழத்தமிழர்களிடமிருந்து வந்திருந்தபடியால் இலக்கியத்தை ஈழம், தமிழகம் என இரண்டாகப் பிளந்து இரு அரங்குகளில் நடத்தினார்கள். பொதுவில் ஈழத்து இலக்கியத்தை தமிழக இலக்கியம் அங்கீகரிப்பதில்லை என்று பேசியவர்களின் குற்றச்சாட்டு இங்கேயும் மெய்ப்பிக்கப்பட்டது. பேசியவர்களும் புலம் பெயர் இலக்கியம் உருவாக்கப்பட்ட அவஸ்தைகளைப் பேசினார்களே ஒழிய புலம்பெயர வழியேதுமில்லாதவர்களைப் பற்றி மறந்தும் கதைக்கவில்லை. தீவிரமான நாட்டு போராட்டத்திற்கும், தீவிரமான இலக்கியத்திற்கும் ஒட்டுறவு வேண்டியதில்லைப் போலும்.

நிகழ்ச்சியின் கவர்ச்சிப் பிரபலமாய் மூன்று நாட்களும் தம்பதி சகிதமாய் வந்து போன கலைஞர் மகள் கனிமொழியையும் இங்கே பதிவு செய் வேண்டியிருக்கிறது. பந்தா ஏதுமின்றி சாதரணராய் வந்தமர்ந்த அம்மையாரின் அருகில் அமரவும், அறிமுகம் பெறவும், படைப்புகளைக் கொடுக்கவும், கையெழுத்து வாங்கவும் ஒரு கூட்டம் சப்தமின்றி அலைந்து கொண்டிருந்தது. அடேய் உடன்பிறப்பே, கழக மாநாட்டிற்கு 10 ரூபாய் நுழைவுக் கட்டணம் கொடுத்து, பல பத்தடி தூரத்தில் நின்று தலைவரின் குடும்பத்தினரைப் பார்த்து அதோ அவங்கதான் கனிமொழியம்மா என்று பூரிப்பாயே, அந்த அம்மா இங்கே இலக்கியக் கூட்டத்தினரோடு பாச நேசத்தோடு பழகியதைப் பார்த்திருக்க வேண்டும். இது தாண்டா வர்க்க பாசம்.

'என் காரக்டரைப் புரிஞ்சுக்கவே மாட்டீர்களா' என்ற அந்த புகழ் பெற்ற ஒற்றை வாக்கியமே ஒரு எழுபதாண்டு காலம் தமிழ்நாட்டுச் சிறுபத்திரிகைகளில் வெளிப்படும் திமிரான அற்பமான வாழ்க்கைத் தேடலாகும். ஈழத்துடன் முற்றிலும், விருப்பத்துடனும் துண்டித்துக் கொண்டு ஐரோப்பாவிற்குப் புலம்பெயர்ந்த ஈழ இலக்கியவாதிகளும், தமிழ் வாழ்க்கையிலிருந்து சிந்தனை ரீதியாகத் துண்டித்துக் கொண்டு அற்பவாத மனவெளிக்குப் புலம் பெயர்ந்த தமிழ்நாட்டுச் சிறுபத்திரிக்கைகாரர்களும், எதன் பொருட்டு இலக்கியத்தினால் உயிர் வாழ்கிறார்கள்?

எங்கேயும் புலம் பெயர முடியாத ஒரு சாராசரித் தமிழனின் வாழ்க்கையும் இருப்பும், மாற்றமும், போராட்டமும் இவை ஒன்றோடொன்று சேர்ந்தும் பிரிந்தும் வளர்ந்தும் வருகின்ற அந்தச் சமூகப் பெருவெளியைக் கடுகளவு கூட அறியாத, அறிய முடியாத இந்த ஒட்டுண்ணிக் கும்பலிடமிருந்து பிறப்பதெல்லாம் இலக்கியம் என்ற பெயரில் உரிக்கப்படும் வெங்காயங்களே.

**சாத்தன்**

*நன்றி : புதிய கலாச்சாரம்*

நன்றி - நூலகத்திட்டம்



புதிய பூமி
PUTHIYA POOMI
சுற்று 07 நவம்பர்/டிசம்பர் 2000 பக்கம் 10 விலை 10/= சுழற்சி 37

## தினமணி ஆசிரியர் மீது பொலீஸ் தாக்குதல் !

கிழக்கு மாகாணத்தில் அக்கரைப்பற்றுப் பொலீசார் தினமணிப் பத்திரிகையின் ஆசிரியர் இப்றான்சா பவூடினை மிக மோசமாகத் தாக்கி சித்திரவதைகளுக்கு ஆளாக்கியுள்ளதுடன் அவரது பத்திரிகைக் கமெராவையும் பறித்துள்ளனர். பத்திரிகையாளர்களுக்கு எதிராகத் தொடரும் வன்முறையின் மற்றொரு சம்பவமாகும். இச் சம்பவத்தை புதியபூமி மிக வன்மையாகக் கண்டிக்கின்றது. பத்திரிகையாளர்களுக்கு எதிரான கொலை தாக்குதல் மிரட்டல்கள் நிறுத்தப்பட வேண்டும் என வற்புறுத்துகின்றோம். தினமனி பத்திரிகை ஆசிரியர் இத்தாக்குதல் பற்றி உயர் நீதிமன்றத்தில் தொடுத்துள்ள அடிப்படை உரிமை மீறல் வழக்கு விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.



# 'இந்து' பத்திரிக்கையின் கபடக் கருத்துக்கள்

இலங்கையின் இனப்பிரச்சினையில் இந்திய அரசின் குரலாக செயற்படும் 'இந்து ' பத்திரிகை நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கு எதிரிடையான கருத்துக்களையே வெளியிட்டு வருகிறது. அம்முயற்சிகளுக்கு எதிரானவர்களின் கருத்துக்களையும் கட்டுரைகளையும் பேட்டிகளையும் வெளியிட்டுவருவது மட்டுமன்றி ஆசிரியர் தலையங்கங்களையும் எதிரான நிலைபாட்டிலேயே எழுதி வருகிறது.

இனப்பிரச்சினை தீர்வுக்கு நேர்மையான சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்படுமாயின் அதில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பங்களிப்பு மறுதலிக்கப்பட முடியாது. நோர்வேயின் முயற்சிகள் தொடங்கிய காலம் தொட்டு அதிகமாகவே விடுதலைப்புலிகளை மட்டும் சாடுகின்ற நிலைப்பாட்டையே 'இந்து' எடுத்து வருகிறது. அண்மையில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் பேட்டியொன்றை பிரசுரித்திருந்தது. அதில் சமாதான முயற்சிகள் மேற்கொள்ள வேண்டிய வேளையில் வெளியிடுவதற்கு உசிதமற்றதென கருதப்படுகின்ற சில கருத்துக்களை அமைச்சர் கூறியிருப்பது ஆரோக்கியமற்ற தாகவே கொள்ளப்பட வேண்டும்.

விடுதலைப் புலிகள் இயக்கம் எவ்வித நிபந்தனைகளையும் முன் வைக்கக் கூடாதென கூறும் அவர் பல நிபந்தனைகளை முன் வைக்கிறார். இவ்வாறான கருத்துக்கள் சமாதான பேச்சுவார்த்தைக்கு ஆரோக்கியமான சூழ்நிலையை ஏற்படுத்தாது அவரின் கருத்துக்கள் விடுதலைப்புலிகள் இயக்கத்தை மட்டுமன்றி தமிழ் நாட்டு தலைவர்களையம் மக்களையும் கோபமூட்டுவதாக அமைந்திருக்கின்றன.

இலங்கையின் இனப்பிரச்சினையால் நடைபெற்றுவரும் யுத்தம் இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி சிங்களமக்களுக்கும் போதும்போதும் என்றாகிவிட்டது. இந்நிலைமையில் நோர்வேயால் எல்லாவற்றையும் நிவர்த்தி செய்துவிடமுடியும் என்ற நம்பிக்கை இருக்கிறதா இல்லையா என்பது ஒரு புறமிருக்க இலங்கையில் சமாதானம் ஏற்பட வேண்டும் என்று விரும்பும் சகலரும் அயல்நாட்டாரிடமிருந்து எதிர்பார்ப்பது என்னவென்றால் மேலும் மேலும் இலங்கையை குழப்பும் விதத்தில் நடந்து கொள்ளாதீர்கள் என்பதுதான்.

இந்திய மக்கள் குறிப்பாக தமிழ் நாட்டு மக்கள் இலங்கைத் தமிழர்களின் அபிலாசைஷகளின் பக்கமே இருந்து வருகின்றனர். இலங்கையின் இனப்பிரச்சினையின் எதிர் விளைவுகளால் இந்தியாவுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை குறைவாக பாக்கமுடியாது. அதற்காக தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை பலவீனப்படுத்தும் நிலைப்பாட்டை இந்திய அரசு எடுப்பது தார்மீகமாகாது. இலங்கையின் இனப்பிரச்சினையில் இந்தியாவின் தலையீட்டினால் பாதிப்புகள் ஏற்பட்ட பக்கமொன்றும் இருக்கிறது. அதற்கு முழு இந்தியாவுக்கும் இந்திய மக்களுக்கும் எதிரான நிலையை தமிழ் மக்கள் எடுக்க முடிாயது. இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாகவும் இலங்கை யுடனான இந்தியாவின் வெளிவிவகார கொள்கை வகுப்பவர்களின் கோணலான நிலைப்பாட்டின் காரணமாகவே இன்னறைய தேக்கங்கள் பின்னடைவுகள் ஏற்பட்டதெனலாம். இந்தியாவிலுள்ள ஜனநாயக முற்போக்கு சக்திகளும் அவற்றின் தலைவர்களும் இலங்கைத்தமிழ் மக்களின் அபிலாஷைகளின் பக்கமே இருந்து வருகிறார்கள்.

இலங்கையின் எல்லைக்குட்பட்டிருந்த பிரச்சினை இன்று இப்பிராந்தியத்தின் எல்லைகளுக்கு அப்பால் சென்றுவிட்டது. ஐரோப்பிய நாடுகளும், ஏகாதிபத்திய நாடுகளும் அவற்றின்

## பேச்சுவார்த்தையைக் குழப்ப திரைமறைவில் முயற்சியா ?

பூகோளமயமாதலுடன் இப்பிரச்சினையை இணைத்துப் பார்க்கின்றன. அதனால் அவை த்தமது வரையறைக் குள்ளிருந்து இனப்பிரச்சினையில் தலையீடு செய்ய முன்வந்துள்ளன. குறிப்பாக நோர்வே இலங்கை அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே பேச்சுவார்த்தை ஏற்பட அனுசரணையாளராக இயங்க முன்வந்துள்ளது. பிரிட்டனும் தனது பங்களிப்பை செய்யப்போவதாக அறிவித்துள்ளது. அவற்றின் நோக்கங்கள் ஏதாகவும் இருக்கலாம். அதுகுறித்து கவனம் தேவை. இலங்கையின் அரசாங்கத்திற்குள்ளும், வெளியிலும் நிலைநிறுத்தப்பட்டிருக்கும் சிங்கள பௌத்த பேரினவாதத்தை அசைக்கும் வகையில் தமிழ் மக்களுக்கு சுயாட்சி வழங்க வேண்டும் என்பதை அந்நாடுகள் வலியுறுத்துகின்றன.

தமிழ் மக்களுக்கு சுயாட்சி வழங்க வேண்டும் என்பதையே இந்தியாவும் கூறிவருகிறது. அதற்காக பேச்சுவார்த்தைகளை தொடங்குவதற்கு எடுக்கப்படும் முயற்சிகள் பற்றி இந்தியாவிலிருந்து வெளிவரும் கருத்துக்கள் மிகவும் குழப்பகரமானவை. பொதுஜனஐக்கிய முன்னணி அரசாங்கம் 1995 ஒக்டோபரில் வெளியிட்ட தீர்வு திட்டத்தை பேச்சுவார்த்தைக்கான அடிப்படை என்று தமிழ் மக்கள் ஏற்றபோது இந்தியா அதுபற்றி விமர்சனங்களை முன்வைத்தது.

அரசாங்கத்தால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தமிழ்மக்களால் நிராகரிக்கப்பட்ட சட்டநகல்வை இந்தியா போற்றியது. இவ்வாறான இந்தியாவின் நிலைப்பாடு இலங்கையைக் குழப்புவதாக மட்டுமன்றி நீண்டகாலத்தில் இந்தியாவும் அமைதி இழக்க நேரிடும்.

இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வுக்கு இந்தியாவின் தலையீடு மட்டும் தேவையானது என்ற சூழல் மாறியுள்ளது. இவ்வாறான சூழ்நிலை ஏற்பட்டதற்கான பொறுப்பை இந்திய ஆளும் வர்க்கம் ஏற்றாக வேண்டும்.

எனவே 'இந்து' முதல் எல்லா ஊடகங்களும் அவற்றின் மேலாதிக்க நிலைப்பாட்டை விட்டு இலங்கையில் தமிழ் மக்களின் அபிலாஷைகள் உறுதி செய்யப்பட்ட நிலையில் அமைதியை ஏற்படுத்துவதற்குத் தமது பங்களிப்பை வழங்க வேண்டும். அப்போதுதான் அவை இலங்கை மக்களினதும் இந்திய மக்களினதும் விருப்பத்தை புரிந்து கொண்டனவாக இருக்க முடியும். இல்லாது விடின் இந்திய மேலாதிக்க சக்திகளின் ஆளும் வர்க்கத்தின் ஊதுகுழல் என்பதை 'இந்து' நிரூபித்துக் கொள்ளவே செய்யும்.

ooo

1ம் பக்க தொடர்

## நோர்வேயின்

பேரினவாதிகள் உள்ளனர். அதே போன்று யூ.என்.பியிலும் தாராளமாக இருக்கிறார்கள். போதாக்குறைக்கு சிகப்புக் கொடியுடன் ஜே.வி.பி யினரும் நோர்வேயின் முயற்சிக்கு எதிராகக் கூச்சல் போட்டு வருகிறார்கள்.

இந்நிலையில் ஜனாதிபதி எத்தகைய நிலைப்பாட்டை வகிக்கப் போகிறார். நேர்மையுடனும் இதயசுத்தியுடன் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தைக்கு தடைகளைத் தூக்கி எறிந்து விட்டு அதற்கான துணிவுடனும் தூர நோக்குப் பார்வையுடனும் முன்வரவேண்டும். அல்லது பேரினவாத சக்திகள் தலைவிரித்தாடி தமது கூக்குரலை ஓங்கச் செய்வதற்கு இடமளித்து அதனைச் சமாளிக்க முடியாத சூழலில் வழமையாக முன்னைய தலைவர்கள் கூறிக் கொண்ட 'பெரும்பான்மை மக்கள் விரும்பவில்லை' என்பதுடன் பின்வாங்க வேண்டும்.

இவ்விரண்டில் ஜனாதிபதியின் தெரிவு எதுவாக இருக்கப் போகின்றது என்பதே எல்லோராலும் நோக்கப் படுகின்றது. ஜனாதிபதியினதும் பொதுசன முன்னணியினதும் இரண்டாவது ஆட்சிக்காலம் நடைபெறுகின்றது. இனப் பிரச்சினையின் தீர்வுக்கு இக் காலத்தைப் பயன்படுத்திக் கொள்ள வாய்ப்பும் வசதிகளும் உண்டு. அதற்குரிய சாதகமான சமிக்கையை விடுதலைப் புலிகளின் தலைவர் காட்டியுள்ளார்.

முதலில் இருதரப்பும் முன்நிபந்தனை இன்றி பேசுவதற்கு இணங்க வேண்டும். அடுத்து உள்நோக்கங்கள் அற்ற யுத்த நிறுத்தம் ஏற்படுத்தப்பட வேண்டும். அதன் ஊடாக உணவு மருந்து எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் தடை அகற்றப்பட வேண்டும். இத்தகைய சூழலில் விட்டுக் கொடுப்பும் புரிந்துணர்வுடனுமான பேச்சுவார்த்தைகள் தொடரப்படல் வேண்டும். இதில் பேரினவாத உள்நோக்கங்களை அடைவதற்காக முழுமையான சுயாட்சியை வடக்கு கிழக்கிற்கு வழங்குவதை மறுக்கும் போக்கை ஆளும் தரப்பு கை விட்டு பூரணத்துவம் கொண்ட சுயாட்சி நோக்கி கீழிறங்கி வர வேண்டும். அதேவேளை புலிகள் இயக்கம் தனித் தமிழ் ஈழம் என்ற தமது நிலையில் இருந்தும் கீழ் இறங்கி வரல் வேண்டும். இவ்வாறு இருதரப்பும் தத்தமது இடத்தில் இருந்து இறங்கி வந்தே பேச்சுவார்த்தை மேசையைச் சென்றடைய முடியும். இத்தகைய ஒரு நிலைக்குச் செல்லுதல் என்பது மிகவும் கடுமையானதும் மிகப் பெரும் சவால்களை எதிர் கொண்டு தாண்டிச் செல்ல வேண்டியதுமாகும். ஆனால் இந்தப் பாதையை நிராகரித்தால் சமாதானத்திற்கான அரசியல் தீர்வுப் பயணத்திற்கு வேறு பாதை கிடையாது. நாடு மேலும் கொடிய இருளுக்குள் தள்ளப்படவே செய்யும். அழிவுகள் பன்மடங்காகிக்கொள்ளும்.

நோர்வேயின் சமாதான முயற்சியானது உள் நோக்கங்கள் அற்றுச் செல்ல வேண்டிய ஒன்றாகும். இதில் அமெரிக்காவின் உலக மேலாதிக்க நோக்கங்களுக்கோ அன்றி இந்தியாவின் பிராந்திய மேலாதிக்க எண்ணங்களுக்கோ இடமளிக்கக் கூடாது என்பது அழுத்திக் கூற வேண்டியதாகும். உலகினதும் ஏற்கனவே எமது நாட்டில் முன்னெடுக்கப்பட்டதுமான சமாதான முயற்சிகளின் பட்டறிவு தகுந்த பாடங்களாகக் கொள்ளப்படல் வேண்டும்.

இப் பேச்சுவார்த்தையின் ஆரம்பத்தில் இலங்கையின் இறமை, ஆள்புல ஒருமைப்பாடு தன்னாதிக்கம் என்பனவற்றுக்கு உத்தரவாதம் வழங்கப்படுவது போன்றே தமிழ்த் தேசிய இனத்தினதும் ஏனைய தேசிய இனங்களினதும் சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான சுயாட்சி வரையறைகள் தகுந்த உத்தரவாதத்துடன் வரையறுக்கப்படல் வேண்டும்.

●●●

1ம் பக்க தொடர்

## வடக்கு-கிழக்கு

வைத்திருந்தால் அது பயங்கரவாதம். அரசாங்கத்திற்கு ஆதரவாக இருந்து ஆயுதம் வைத்திருந்தால் அது ஜனநாயக நீரோட்டம். இதை விட ஜனநாயக நடைமுறைக்கு வேறு விலக்கம் தேவை இல்லை. தமிழ் இளைஞர் ஆயுத இயக்கங்கள் எங்கே தொடங்கி எங்கே சென்று நிற்கின்றன என்பது ஒரு விடயம். அரசாங்கம் ஜனநாயகம், மனித உரிமை, சட்டம், ஒழுங்கு ஆகியவற்றை எவ்வாறு பிரயோகித்து வருகின்றது என்பது அடுத்த பிரதான விடயமாகும். முதலாளித்துவ ஜனநாயகத்தின் முகமூடி முற்றாகக் கிழித்து தொங்குகிறது மட்டுமன்றி அதன் அம்மணமான தோற்றம் இன்று இலங்கையில் ஒன்றும் இல்லாதவாறு அவலட்சணமாகத் தெரிகின்றது என்பதையே அண்மைய சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

## வெலிக்கடைக்குப் பின் 18ம் ஆண்டு

கூண்டுக் கிளியைக் கொன்றவர் யார் ?
யாருமறியாமல் வந்து போன பூனையோ ?
இரகசியமாய்க் கூண்டுக் கதவைத் திறந்து வைத்தவனா ?
கிளியைக் கூண்டிலிட்டுச் சிறகை நறுக்கியவனா ?
விசாரணை நடக்கட்டும் !

நீதவான் வருகிறான்
"அமைதி !"
பூனை அவனுடையது
கூண்டுக் கதவைத் திறந்தவன் அவன் கூட்டாளி
கூண்டில் அடைத்துச் சிறகு அரிந்தவன் அவன் உறவினன்
விசாரணை தொடரட்டும்

தீர்ப்பு வழங்கப் படவுள்ளது
"அமைதி ! அமைதி !"

"நீதவானுக்கு மாசு கற்பிக்கும் நோக்குடன்
திட்டமிட்டே கூண்டிற் புகுந்த
கிளியே குற்றவாளி
கிளியைத் தண்டிக்க இயலாததால்
தீர்ப்பை எதிர்ப்பவர்களைத் தண்டிக்கலாம்"

அ
அ மை தி
தி
?

"அதை ! அமைதி ! அமைதி !"
காவலர்களே, துப்பாக்கிகளால் அனைவரையும் சுட்டு
அமைதியைப் பேணுவீர்களாக!"

*புவனம்*

4ம் பக்கம் தொடர்

## மாலையக

இனவிரிசலை ஏற்படுத்தும். வடக்கு கிழக்கு எல்லை கிராமங்களில் இராணுவத்தின் நிலைகொள்ளல் காரணமாக இடம்பெறும் அத்துமீறல்கள் சிங்கள மக்களையும் விட்டுவைக்கப் போவதில்லை. எனவே மலையகத்தில் மேலதிக இராணுவ பொலிஸ் நடவடிக்கைகள் நிலைமையை மேலும் மோசமாக்கும். அதனால் அவை கைவிடப்பட வேண்டும்.

6. இன ஒற்றுமையை கட்டி வளர்ப்பதற்கான குறுகிய கால நீண்ட கால வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். அவற்றின் மலையகத்தமிழ் மக்களின் உரிமைகள் பற்றி சிங்கள மக்களுக்கு அறிவூட்டப்பட வேண்டும்.

மேற்படி திட்டங்களை முன்னெடுப்பதற்கு மலையகத் தமிழ் கட்சிகள் தொழிற்சங்கங்கள் சிங்களமக்கள் மத்தியிலுள்ள (அவை சிறியனவாயினும்) இடதுசாரி, ஜனநாயக, சக்திகளுடன் ஐக்கியப்பட்டு வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டிய கடப்பாட்டை கொண்டிருக்கின்றன. மலையக அமைப்புகள் அவற்றின் குறுகிய எதிர்பார்ப்புகளான தொழிற்சங்க சந்தா வாக்குகள் என்பவற்றை விட மலையத் தமிழ் மக்களின் இருப்பு பற்றியும் அவர்களின் உரிமைகளை வென்றெடுப்பது பற்றியும் புதிய அணுகுமுறைகளை வகுத்துக் கொள்ள வேண்டும். இல்லாவிடில் பேரினவாத சக்திகளால் தோற்றுவிக்கப்டும் பேரபாயங்களைத் தடுத்து நிறுத்த முடியாது.

வெளியிடுபவர் : இ. தம்பையா இல. 47, 3ம் மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு யூ. கே. பிரின்டஸ். 26/1இ சிவானந்தா வீதி, கொழும்பு 13.